295

# ஜகன்மோகினி



ஸ்ரீமதி. ஜெயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாஸன்

OFFICE OF THE REGISTRAR ... 14 AUG 1943 MADRAS

## இவ்விதழில்


[illegible]ரா கீதம் (தொடர்ச்சி)
வை. மு. கோ.

ஜகன்மோகனகோபாலன்
ஸ்ரீகிருஷ்ண லீலை:
இரண்டு கவிச் சித்திரங்கள்
பி. ஸ்ரீ.

ஸ்ரீ புண்யாரண்ய க்ஷேத்ர
ஸ்ரீ பாடலாத்ரி மகிமை
ஸ்ரீ. உ. வே. பாஷ்யகார் ஸ்வாமி

ஸ்ரீ ஜெயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்
வை. மு. கோ.

ரத்ன மாலா
ஸ்ரீ. எஸ். என். குப்புராஜன்

வரப் பிரசாதம்
ஸ்ரீமதி. ஸி. ஆர். ஸரோஜா

நீதி சாரம்
"இனியன்"

திருக்குறள் ஸாரம்
வரகவி பாரதியார்


ஜெகனே
திருவல்லி


Vol. 20. No. 6.
JUNE 1943.


*Jaganmohini*
*The only Ladies' Magazine in Tamil*
*Commands the LARGEST circulation*
*among monthly journals*

சுபானு
வைகாசி

JAG... OFFICE, SINGAPERUMALKOIL. S. I. Ry.


JC
M211, N22JM
N43.20.6
183020.

...சிரியை-
வை. மு. கோதைநாயகி அம்மா...



## அன்பர்களுக்கு ரஸமான விருந்து

"மோகினி" மலருக்கென்று அனுப்பிய சில கட்டுரைகள், கதைகள் மலரில் பிரசுரிக்க இயலாதுபோனது நினைவிருக்கலாம். அவை இப்போது மோகினியில் வெளிவந்து நேயர்களை மகிழ்விக்கின்றன. மார்ச் இதழ் முதல் வெளியாகிவரும் **திருக்குறள் ஸாரம்** அடுத்த இதழில் முடிவுபெறும். சென்ற இதழில் **"அன்பளிப்பு"**; இவ்விதழில் **"வரப்பிரஸாதம்"**, **"ரத்னமாலா"** வெளியாகியுள்ளன. ஷை நான்கும் தனிப்பட்ட சிறப்புடன் படிப்போருக்கு ரஸமான விருந்தளிக்கும்வண்ணம் அமைந்துள்ளன. **"ரத்னமாலா"**வைப் பற்றி விசேஷமாகக் குறிப்பிடவேண்டிய அம்சம் ஒன்றிருக்கிறது; அதன் ஆசிரியர் மிக சாமர்த்தியமாக, பொறுமையுடன் ஒரு அரிய காரியத்தை சாதித்திருக்கிறார். அது என்னவென்பது மோகினி அன்பர்களுக்குப் படித்தவுடனே விளங்கும்.

## புதிய பதிப்புகள் தயார்

நமது பிரசுரங்களில் பல இப்போது புதிய ரூபத்தில் மிகவும் அபாரமான செலவில் புதிய பதிப்புகளாகத் தயாராகிவருகின்றன. மாதவமணி, அம்ருததாரா, அன்பின்சிகரம், ஜெயஸஞ்ஜீவி, உளுத்த இதயம், சுகுணபூஷணம் முதலியவற்றின் புதிய பதிப்புகள் இனி 6 அணாவீதம் கிடைக்கும்.

## ஸிலோன் நண்பர்களுக்கு முக்கிய அறிவிப்பு

27-3-43 முதல் இந்தியாவிலிருந்து ஸிலோனுக்குக் கதை புத்தகங்கள் ஏற்றுமதி செய்யக்கூடாதென சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருப்பதால், ஷை உத்திரவு மாற்றப்படும்வரை நேயர்கள் புத்தகங்களுக்கு பணம் அனுப்பவேண்டாம். ஏற்கெனவே அனுப்பிய சிலருக்கு நாம் அனுப்பிய புத்தகங்கள் திரும்பிவந்துவிட்டன. மோகினி **மாத்திரம்தான்** ஸிலோன் அன்பர்களுக்குக் கிடைக்குமாகையால் ஏற்கெனவே புத்தகங்களுக்காக பணமனுப்பியதை **சந்தா** கணக்கில் பதிவுசெய்துகொள்கிறோம்.

## உடனே அனுப்பவும்

சென்ற வருட ஆரம்பத்தில் சந்தா செலுத்துகையில் சிலர் இவ் வருஷத்தில் சில இதழ்களுக்கும் சேர்த்து அனுப்பியுள்ளார்கள். அத்தகைய நண்பர்கள் இவ்வாண்டு முடிய டிஸம்பர்வரை சந்தா பாக்கித் தொகையை உடனே அனுப்பவும். (மாதத்திற்கு மூன்றணாவீதம்.)

## அன்பர்கள் கவனிக்கவும்

சுபானு வருஷ ஆரம்பம் முதல் மோகினி சிங்கப்பெருமாள் கோயிலில் தனக்கென்று நிறுவப்பட்ட "வைத்தமாநிதி"யிலிருந்தே வெளிவருகிறாள். நேயர்கள் இனி கீழ்கண்டவாறு விலாஸமெழுதவும்:—

**"ஜகன்மோகினி" ஆபீஸ்,**

"வைத்தமாநிதி", ஸ்டேஷன் ரோட்,

**சிங்கப்பெருமாள் கோவில் B. O.**

ஸ்ரீராமஜயம்.





சுபானு ஸ்ரீ வைகாசிமீ

ஜூன் 1943

மலர் 20 இதழ் 6


ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி


Jun. 1943. Vol. 20. No. 6.





**பி.ஸ்ரீ**

# ஆழ்வார்கள் கண்ட அழகுத் தெய்வம்

## 13. ஸ்ரீகிருஷ்ண லீலை: இரண்டு கவிச் சித்திரங்கள்

ஸ்ரீ கிருஷ்ண லீலைகள் நீண்டகாலமாக நமது ஜனங்களின் பக்திப் பெருங் காதலுக்கு ஓர் இலக்கியமாக அமைந்திருக்கின்றன. இவற்றுள் கிருஷ்ணன் வெண்ணெய் உண்ட விளையாட்டும் மண்ணையுண்ட விளையாட்டும் இறைவனது பட்சபாதமற்ற அன்புள்ளத்தைக் குறிப்பிடுகின்றன.

கிருஷ்ணனுக்கு வெண்ணெய் உண்பதில் எவ்வளவு பிரியமோ, அவ்வளவு பிரியம் ஆய்ச்சியர்களுக்கும் அவன் வெண்ணெய் உண்பதிலே. அவர்கள் புதிதாகத் திரட்டிய வெண்ணெயை உருட்டி உருட்டி அவன் கையில் வைக்கிறார்களாம். சிவந்த தாமரைபோன்ற அந்தக் கையிலும், சின்னஞ் சிறு விரல்களிலும் ஒட்டும்படி அவன் அதை வாங்கி வாங்கி அமுது செய்கிறான். அமுது செய்தபின் ஆனந்தமாகக் கூத்தாடுகிறான். அவர்களுக்கு நன்றி தெரிவிக்கவா? அல்லது வெண்ணெய் ஜெரிக்கவா? அது எப்படியிருந்தபோதிலும் இவன் கூத்தாடுவது அவனுக்கும் ஆனந்தம்; அவர்களுக்கும் ஆனந்தமே.

கூத்தாடும்போதே குழந்தைக் கண்ணன், அவர்களை அன்போடு இளநகை யரும்பி நோக்குகிறான். அப்போது அவர்களுடைய கண்களும் மகிழ்ச்சியால் மலர்கின்றன, ஸ்ரீ கிருஷ்ணனுடைய கண்களின் நேசப் பார்வையிலும் உதடுகளிலும் தோன்றும் அந்த இளநகையை என்னவென்று சொல்வது! அந்த ஜகன்மோகன சௌந்தரியம் உள்ளங்களை அப்படியே கொள்ளைகொள்ளுகிறது. இது கோகுலத்தில் நடந்ததென்றுதானே நினைக்கிறோம்.

இத்தகைய காட்சியின்பம் ஸ்ரீவில்லிபுத்தூரிலேயே பெரியாழ்வாருக்கு விசேஷமாய்க்கிடைத்துவிட்டது. அவருடைய பெயரைத் தமக்கு இடப்பெற்ற

பாக்கியசாலியும் பாரதம் பாடிய பக்தருமான வில்லிபுத்தூராழ்வாரும் தம்முடைய ஊரில் இக்காட்சியை ஒருவாறு அனுபவித்துப் பேரின்பம் அடைந்தார்.

அவர் தாம் அனுபவித்த பேரின்பத்தைப் பின் வரும் பாட்டில் வெளியிட்டிருக்கிறார்:

> **சேயபங்கயச் சிறுவிரல் அங்கையில் நிரட்டிய நறுவெண்ணெய்,**
> **ஆயர்மங்கையர் இடஇட அமுதுசெய்(து) ஆடிய திருக்கூந்தும்,**
> **நேயமும்குறு முறுவலும் புரிந்துபார்த்(து) அருளிய நெடுங்கண்ணும்**
> **மாயவன்திரு வடிவமும் அழகும்என் மனத்தை விட்டகலாவே!**

[சேயபங்கயம் = செந்தாமரை. குறுமுறுவல் = இளநகை.]

பாட்டு, சாதாரணமானதுதான் எனினும் பாரதம் பாடிய கவிஞரின் கிருஷ்ண பக்தியை வெளியிடத்தக்க பக்திப் பாட்டு என்பதில் சந்தேகமில்லை.

இனி இப்படிப்பட்ட காட்சியின்பத்தைப் பெரியாழ்வாரைப்போலவே அனுபவித்துப் பக்தி வெறிகொண்ட ஒரு பாட்டைப் பார்ப்போம். அது அதிசயமான கவிதை; கவிதா தெய்வத்திற்கே அணி என்று சொல்லத்தக்க அருமையான பாடல்களில் ஒன்று; குலசேகராழ்வார் என்ற பெரியார் பாட்டு; இவரும் பெரியாழ்வாரைப்போல் பக்திக்கடலின் ஆழம் கண்டவர். இவர் ராமபக்தர்; பெரியாழ்வார் கிருஷ்ணபக்தர். பெரியாழ்வாரும் ராமனைப் பாடியிருக்கிறார்; குலசேகரரும் கண்ணனைப் பாடியிருக்கிறார். இந்தக் கண்ணன் பாடல்களில் ஒன்றுதான்.

> **முழுதும் வெண்ணெய் அளைந்து தொட்டுண்ணும்**
> **முகிழ் இள்ஞ்சிறு தாமரைக் கையும்,**
> **எழில்கொள் தாம்புகொண்(டு) அடிப்பதற்(கு) எள்கு**
> **நிலையும் வெண்தயிர் தோய்ந்த செவ்வாயும்,**
> **அழுகையும், அஞ்சிநோக்கும் அந்நோக்கும்**
> **அணிகொள் செஞ்சிறு வாயநெளிப் பதுவும்,**
> **தொழுகையும்-இவைகண்ட அசோதை**
> **தொல்லை இன்பத்(து) இறுதி கண்டாளே!**

**—குலசேகராழ்வார்**

குழந்தைகளைத் தெய்வமாகக் கொண்டாடும் மனநிலைதான், தெய்வத்தையும் விளையாட்டுக் குழந்தையாக வழிபடத் துணிந்தது. கிருஷ்ண பகவானை வீரன், காதலன், தோழன், ராஜா, ராஜதந்திரி, கீதாசாரியன் முதலான பல நிலைகளிலும் நம்மவர் வழிபட்டு வந்தபோதிலும், ஜகன்மோகன பால கோபாலனை வழிபடுவதில் நமக்கு விசேஷ உத்ஸாகம் உண்டு. இந்த அவதார மூர்த்தியின் விஷமத்தனமான விசித்திர லீலைகளைக் குழந்தைகளும் பெரியவர்களும் அதிகமாகப் பேசியும் கேட்டும் ஆனந்திக்கிறார்கள். எத்தனை நூற்றாண்டுகளாக, எத்தனையோ கவிகளின் இன்னிசைப் பாடல்களிலே குழந்தைக் கண்ணன் தவழ்ந்து விளையாடுகிறான்! பழைய தமிழ்க் கவிகளில் பெரியாழ்வாரும் குலசேகராழ்வாரும் கிருஷ்ணனது பால லீலைகளைச் சித்திரித்துக் காட்டுகிறார்கள்.

மேலே காணப்படும், குலசேகராழ்வாரது பாட்டு, குழந்தையின் மனோதத்துவத்தை அழகாக விளக்குவதோடு, தாயின் மனநிலையையும் நன்றாக எடுத்துக் காட்டுகிறது. பாலகிருஷ்ணன் இருதயங்களைத் திருடுவதுபோல், தயிர் வெண்ணெய் முதலியவற்றைத் திருடுவதும் பிரசித்தமான கதை. இந்தக் கதையை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஆழ்வார் ஒரு 'நாடகக் காட்சி'யை நம் கண்முன் கொண்டு நிறுத்துகிறார் என்றே சொல்லவேண்டும்.

கிருஷ்ணன் வெண்ணெய் திருடுவது ஆய்ச்சியர்களுக்கெல்லாம் தெரிந்த பகிரங்க ரகசியமாயிருந்தும், தாயான யசோதைமட்டும் தன் மகனுடைய விஷமத்தனத்தை நம்பவில்லையாம். ஆனால் ஒருநாள் கிருஷ்ணனைக் கையும் களவுமாகத்தானே கண்டுபிடித்துவிடுகிறாளாம். வெண்ணெய் அளைந்து அளைந்து சாப்பிட்டுக்கொண்டிருந்ததால் குழந்தையின் அழகிய சிறு கை முழுதும் அப்படியே வெண்ணெயாயிருக்கிறது. இதைக் காட்டிலும் வேறு சாட்சி வேணுமா?

உடனே அவனைக் கட்டிப்போட வேணுமென்று தாம்புக்கயிறு கொண்டு வருகிறாள். இல்லாத கோபத்தையெல்லாம் வருவித்துக்கொண்டு அந்தக் கயிற்

றைக்கொண்டே அடிக்கக் கையை ஓங்குகிறாள். அப்போது கிருஷ்ணன் தயிர் தோய்ந்த வாயோடு அழுகிறான். ஆம்; திருட்டுக்கு இன்னும் ஒரு சாட்சி!

எனினும் கோபம் அதிகமாகவில்லை; அந்த அழுகைக்குமுன் அது என்ன செய்யமுடியும்? இதோ, பயத்தோடு தாயை நோக்குகிறான். அழகான அந்தச் சிறுவாயை நெளிக்கிறானே, ஏதோ சொல்லப்போகிறானா? ஆனால் அந்த அழுகைக்குமேல் என்னதான் சொல்லமுடியும்?

ஆ, இப்போது கும்பிடு போடுகிறான். தாயின் கோபம் எங்கே? குழந்தையின் அழுகையும், தொழுகையும், இடையே அச்சத்தோடு தோன்றிய அந்தக் கண் கலக்கமும், வாய் நெளிப்பும், அடிக்க விரும்பிய தாயின் உள்ளத்தை ஆனந்த பரவசமாக்கிவிடுகின்றன.

"என்ன பொருளழகு!" என்று அதிசயிக்கிறீர்கள் அல்லவா? இந்தப் பொருளழகையும் வென்றுவிடுகிறது. பாட்டின் பண்ணழகு; பாடிப் பாருங்கள்.

ஆம், ஆம்; பாடிப்பாடிப் பாருங்கள். பக்தியோடும் பாடிப்பார்த்தால் அந்தக் காட்சியின்பம் நமக்கு ஒருவாறு புலனாகும்.

வில்லிபுத்தூரார் கவிச்சித்திரத்தையும் பாருங்கள்; குலசேகராழ்வார் கவிச் சித்திரத்தையும் பாருங்கள்.

---




# ஸ்ரீ புண்யாரண்ய க்ஷேத்ர ஸ்ரீ பாடலாத்ரி மகிமை

●

ஸ்ரீ. உ. வே.
சி. கோ. பாஷ்யகார் ஸ்வாமி

ஸ்ரீபிரம்மாண்ட புராணத்தில் உமாமஹேச்வர சம்வாதித்தல். க்ஷேத்ரகாண்டத்தில் பார்வதியானவள் பரமசிவனைப் பார்த்து பாடலாத்திரி மாஹாத்மியத்தை விஸ்தரேணி சொல்லும்படி கேட்டதற்கு,—சத்யவிரத க்ஷேத்திரத்துக்கு 20 யோசனை தூரத்தில் புண்யாரண்ய க்ஷேத்திரம் ஒன்று இருப்பதாயும், அதில் பாடலாத்திரி என்றொரு பர்வதம் இருப்பதாயும் அதில் ஜாபாலி மஹரிஷியின் தபஸுக்கு இணங்கி ஸ்ரீயப்பதியாய் அவாப்த சமஸ்த காமனான சர்வேச்வரன் மலையே திரு உடம்பாய் திருநேத்ரதாரியாய், மலை கீழ்து பிளந்த சிங்கமாய், எங்குமுளன் கண்ணனென்ற மகனைக் காய்ந்து, இங்கில்லையாயென்றிரணியன் தூண்புடைப்ப, அங்கப்பொழுதே யவன் வீயத்தோன்றியவராயும், இவையா பிலவாய் திறந்தெரி கான்ற, இவையா வெரி வட்டக் கண்கள்—இவையா வெரி பொங்கிக் காட்டு மிமையோர் பெருமான், அரி பொங்கிக்காட்டு மழகு. அழகியான் தானே, யரியுருவன்தானே, பழகி யான்தானே பணிமின் என்கிற ஸ்ரீ சூக்திப்படியும்.

பரப்ரும்மரூபம்—பிரபுத் தாடகாசம்—கரப்பிரௌட சக்கரம்—ஹரப்ரும்ம ஸேவ்யம்—ப்ரஸன்னம் த்ருணேத்திரம்—ஹரிம்பாடலாத்ரௌ—சரண்மேககாத்திரம்—ந்ருஸிம்மம் பஜாம:—கிரி ஜன்ரஹரிமீசம்—கர்விதா ராதிவஜ்ரம்—பரம புருஷமாத்யம்—பாடலாத்ரௌ பிரசன்னம்—அபயவரதஹஸ்தம்—சங்க சக்ரே ததானம்-சரணமிக பஜாம—ஸாஸவதம் நாரஸிம்மம். "வாமம், பாதம், பிரஸார்ய

ஸ்ரதகண உதிதம் தக்ஷிணம் குஞ்சயுத்வா வாமோருண்யஸ்தஹஸ்தம் வரதம பயதம் பாணிநைதக்ஷிணேன. சங்கம், சக்ரம் ததானம் சசினிபவதனம், சர்வவந்த்யம், திருணேத்ரம்,வந்தேஹம் பாடலாத்ரேள விலஸிதமரிசம், பஜ்ர தமிஷ்ட்ரம், ஸ்ரீந்ருஸிம்மம்'' என்கிற த்யானச்லோகப்படி ஜாபாலி மஹரிஷிக்கு சேவை சாதித்துக்கொண்டு இருக்கிறார்.

இப்படியிருக்க, சுமார் 400 வருஷத்துக்கு முன்பு மேற்படி சன்னிதியை விருத்திசெய்ய, சத்தியவிருத க்ஷேத்திரம் என்று விவஹரிக்கப்பட்ட பெருமாள் கோவிலில் எழுந்தருளியிருந்த கோவில் கந்தாடை அப்பாச்சியாரண்ணாவின் பெருமையை, அழகியமணவாள ஜீயர் பிரசரித்த **வைபவப் பிரகாசிகை** கிரந்தத்திலும், மணவாளமாமுனிகள் வைபவத்தை வெளியிட்டருளிய **யதீந்திரப்ரவண ப்ரபாவத்திலும்**, திருமழிசை அண்ணாவப்பங்கார் வெளியிட்டருளிய **பழனடை விளக்கம்** என்கிற கிரந்தத்திலும், பெருமையாய் சொல்லப்பட்டவராய் அவருடைய வம்சத்தில் அவதரித்த **அண்ணாவிலப்பன் குமார வேங்கடாச்சார் ஸ்வாமி**யினுடைய விசேஷ அபிமான ஸ்தலம் இந்த சிங்கப்பெருமாள் கோவில்.

பூர்வத்தில் இந்த புண்யாரண்ய க்ஷேத்திரத்தில் **தர்மவர்மன்** என்கிற ராஜா ராஜ்யபாரம் பண்ணிக்கொண்டிருக்கும்போது ஒருநாள் கஜாருடனாய் வேட்டை மார்க்கமாக வருங்காலத்தில் வாமதேவருடைய குழந்தை விளையாடிக்கொண்டிருந்தது. தர்மவர்மன் ஏறிக்கொண்டுவந்த யானையின் கால் இடறி குழந்தை மரித்துவிட, வாமதேவர் புத்திரசோகத்தால் தர்மவர்மனை 'கஜசரீரமாகப் போகக்கடவாய்' என்று சபிக்க, மேற்படி தர்மவர்மன் வாமதேவரிடம் பணிந்து அபுத்தி பூர்வமாய் என் யானையின் கால் பட்டுவிட்டதாகையால் என்னைக்ஷமித்து சாபவிமோசனம் ஆகவேண்டுமென்று கேட்க அதற்கு அவர், சிலகாலம் கஜ சரீரத்துடன் திரிந்துகொண்டு இருக்கக்கடவாய் என்றும், பிறகு ஒராநொரு காலத்தில் இந்த புண்யாரண்ய க்ஷேத்திரத்தில் பாடலாத்திரி பர்வதத்துக்கு ஆக்னேய பாகத்தில் சுத்தபுஷ்கரணி என்று சொல்லப்பட்ட தடாகதீரத்தில் மஹரிஷிகளின் நடுவில் ஜாபாலி மஹரிஷி தபஸ்செய்வாரென்றும். அவருடைய கரஸ்பரிசத்தால் சாபவிமோசனமாய் இந்த கஜசரீரத்தைவிட்டு கந்தர்வ சரீரத்துடன் கந்தர்வலோகம்போய் சேரக்கடவாய் என்றும் கிருபையுடன் வரங் கொடுத்தார். தர்மவர்மனின் கஜசரீரம் கழிந்த சுத்த புஷ்கரணி தீரமும் உள்ள இடம் இந்த க்ஷேத்திரம். இப்பவும் "ரமணீயம்; பிரசன்னம்பு: சன்மனுஷ்ய மநேபைத" என்கிற வாக்யப்படி அதிரமணீயமான தீர்த்தத்துடன் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

இப்படியிருக்க, பிருந்தாரண்ய க்ஷேத்திரத்தில் ஸ்ரீ உபயவேதாந்த பிரவர்த்தகராய் எழுந்தருளியிருந்த **வைத்தமாநிதி முடும்பை அப்பங்கார் ஸ்வாமியின்** திருக்குமாரர் பார்த்தசாரதி அய்யங்காரின் தர்மபத்தினியான ஸ்ரீமதி கோதை நாயகி அம்மாள், பண்டிதர்கள் பார்த்து ஆனந்திக்கும்படியாய் 59 நாவல்களை, வெளியிட்ட **ஜகன்மோகினி**, சென்ற ஒருவருஷ காலமாய் புண்யாரண்ய க்ஷேத்திரத்தில் அடங்கிய **வேங்கடாபுரத்தில்** குடிகொண்டு, 20-வதாண்டு மலரும் **கிருபாமந்நீர்** என்கிற வைரவிழா (60-தாவது) நாவலும் வெளியிட்டு சகல நண்பர்களும் ஆனந்தித்துக்கொண்டிருப்பது தெரிந்த விஷயமே.

இந்த சிங்கப்பெருமாள் கோவில் பாடலாத்திரி குகையில் அஹோபிலவல்லி சமேதராய் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீந்ருஸிம்மன் கிருபையுடன் ஜகன்மோகினியை கடாக்ஷித்து தன் சமீபத்திலேயே **'வைத்தமாநிதி'** எனும் ஒரு மந்திரத்தை நிர்மாணம் பண்ணிக்கொடுத்து சுகமாக இருக்கும்படிச் செய்திருக்கிறார். **ஜகன்மோகினி** விருத்தியடைந்து அதன் வாயிலாய் இந்த க்ஷேத்திரத்தின் ஸ்தலபுராணமும் இன்னும் அநேக கிரந்தங்களும் வெளிவந்து நண்பர்கள் ஆனந்திப்பதுடன் ஸ்ரீந்ருஸிம்மன் திருவுள்ளத்துக்கும் உகப்பாயிருக்கவேணுமென்று ஸ்ரீ நரசிம்மர் சந்நிதியில் பிரார்த்திக்கிறேன்.

வருமாறு சிந்திக்கலானேன்; 'அப்பெண்ணை எங்கோ... ஆமாம் **ருக்மிணிகாந்த**ரால் நடத்தப்படும் **கலாநிலயத்தில் தான்...** சந்தித்ததாக ஞாபகம். ஆம், லேவாதேவி விஷயமாக நான் **நளினசேகர** நாயுடுவை பார்க்கச் சென்றபோது, அங்கு அவள் பிரம்பால் செய்த சில சாமான்களை விற்க விலை பேசிக்கொண்டிருந்தாள்... ஆனால் அவள் இங்கு ஏன் வந்தாள்! என் மாமாவின் முன்னிலையில் மண்டியிட்டு மன்றாடவேண்டிய காரணம் என்ன? இதில் ஏதோ மர்மம் இருக்கிறது.' என்றெல்லாம் மனம் குழம்பினேன்.

ராஜமோஹன் என் மாமாவின் அறைக்குச் சென்று திரும்பிவந்தான். அவனிடம் நான் ஆவலுடன் சென்று, "அவள் சௌக்கியமாய்விட்டாளா?" என்றேன்.

"எவள்? ஓகோ! அந்தப் பெண்ணா! சௌக்கியமாய்விட்டாள்." என்றான் சாவதானமாக. என் இதயத்தினுள் நடக்கும் போராட்டம் அவனுக்கென்ன தெரியும்?

"இன்றைக்கு இவ்விடமிருந்து அவளிருப்பிடத்திற்குப் போகக்கூடிய நிலைமையில் இருக்கிறாளா?" என்றேன்.

"அவள் போய்விட்டாள்"

"எங்கே?"

"எனக்குத் தெரியாது." அவன் பதிலில் அலக்ஷியம் காணப்பட்டது. என் உள்ளம் பட்டபாட்டை நான் எவ்வாறு எடுத்துக் கூறுவது? கையில் சிக்கிய பக்ஷி, அதை கவனிக்குமுன் பறந்தோடி விட்டதென்றால் ஏமாற்றம்தானே.

நான் மாலதியைப்பற்றி யாரிடம் விசாரித்து அறிந்துகொள்வது? மாமாவைக் கேட்கலாமென்றாலோ மரியாதை இல்லை. ராஜமோகனிடம் விசாரிக்கலாமென்றாலோ அவன் சந்தேகப்பிராணி; சரியாக பதில் சொல்லமாட்டான். நானும் அவளைப்பற்றி எங்கெல்லாமோ புலன் விசாரித்தேன். பலனில்லை. மனமுடைந்து போனேன். என் இதயம் **உளுத்த இதயம்** ஆகிவிட்டது. அதில் **மகிழ்ச்சி உதயம்** எப்போது ஆகுமோ?

இவ்வாறு அவளைப்பற்றித் தீவிரமாகப் புலன் விசாரித்து மனமுடைந்து போகக் காரணம் என்ன என்று கேட்கலாம். அதைச்சொல்ல நான் கடமைப்பட்டவன். எப்பொழுது லளிதம் பொருந்திய **மாதவமணி**யாகிய மாலதியை வர்த்தகசாலையில் கண்டேனோ அந்நாளிலிருந்து அவள் எனது **ப்ரேமப்ரபா** ஆகிவிட்டாள். அதிக பூஷணம் அவளிடம் காணவில்லையென்றாலும் உத்தமகுணமே **சுகுண பூஷணமாக** விளங்கியது. சங்கீதத்துடன் நாதம் ஒன்றாகக் கலந்திருக்கிறதுபோலவே என்னுடன் கலந்த **வாழ்க்கையின் நாதம்** அவளாகி விட்டாள் என்று அன்றிலிருந்து தீர்மானித்துவிட்டேன்.

ஆயினும் எனக்குப் பின்வருமாறு சந்தேகம் தோன்றலாயிற்று. இதுவரை நான் எங்கெங்கோ விசாரித்துப்பார்த்தும் அவளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அன்று கண்டது **கானல்நீர்த்** தோற்றம்தானா? அல்லது அவள் வெளியூரில் எங்காகிலும் வசிக்கிறாளோ? என் மனம் அவளையே நாடுகிறது. ஆனால் அவள்? இதை நினைக்கும்போது என் மனம் பகீரென்கிறது. ஒருவேளை அவளை நேரில் சந்தித்து எனது அடங்காத ஆவலை அவளிடம் சொன்னால், அதை அவள் நிராகரித்தால் என்ன ஆவது என் கதி? எனது **ஆத்மசக்தி** பூராவையும் இழந்து பித்தனைகவல்லவோ ஆகிவிடுவேன். பிறகு என் நிலைமையை மாற்றக்கூடிய **ஜெயசஞ்சீவி** யாரிடமிருக்கிறது? சே! அப்படிச் செய்யமாட்டாள் அப் **பக்ஷமாலிகை.** அவள்மீது கொண்ட **அன்பின்சிகரத்தை** எட்டிப் பிடிக்கும் நன்னாள் வந்தே தீரும்!" என்று அங்கலாய்த்தேன்.

என் மாமா தன் வர்த்தகசாலையை 25 வருஷங்களாக நடத்திவருகிறார். **தயாநிதியின்** கிருபையால் யாதொரு நஷ்டமோ, தீங்கோ நேராமல் **புகழ்மாலையை** அணியாகக் கொண்டது. கடல்கடந்த நாடுகளிலெல்லாம் லேவாதேவி உண்டு. அப்படிப்பட்டவர்த்தகசாலையில் வியாபாரமார்க்கங்களைக்கற்றுவந்தேன்.

ஒருநாள் என் மாமா என்னை அழைத்து, "கோபாலரத்னம்! உன்னை ஒரு விசேஷ காரியத்தின் பொருட்டு விசேஷதூதராக நியமிக்க உத்தேசித்திருக்கிறேன்." என்றார்.

"ரொம்பவும் நல்லது. எனக்கிடும் எந்த வேலையையும் முழுத்திறமையுடன் செய்யக் காத்திருக்கிறேன்."

"ஒருநாள் என்னறையில் சோகக்கலவரத்துடன் இருந்த ஒரு பெண்ணைப் பார்த்தாயே ஞாபகமிருக்கிறதா?"

என் இதயத்தில் செயலற்றுக்கிடந்த வீணைக்கம்பியை இப்பேச்சு தட்டிவிட்டதனாலேற்பட்ட ஓர் உணர்ச்சியை என்னால் கட்டுப்படுத்த முடியாமல்போயிற்று. "என்னால் அதை எப்படி மறக்கமுடியும்?" என்றேன்.

"நான் என் சிறுவயதில் **ராதாமணி** என்ற ஒரு அழகான பெண்ணை அளவுக்கு மீறிக் காதலித்தேன். எங்கள் காதல் பூவாகிப் பிஞ்சாகிக் கடைசியில் **காதலின்கனியாயிற்று.** ஆனால் எதிர்பாராத வகையில் அக்கனி திடீரென்று அழுகிவிட்டது. ராதாமணி என்னை நிராகரித்துவிட்டு வேறொருவரை மணந்து கொண்டாள். என் அதிர்ஷ்டம் அவ்வளவுதானென்று விரக்தியடைந்தேன். பிறகு காலம் கடுகிச்சென்றது. அன்றயதினம் நீ பார்த்த அந்தப் பெண் அவளுக்குப் பிறந்தவள்தான். அவள் பிறந்ததும் ராதாமணி இறந்தாள். அவள் தாய் இறந்த சங்கதி எனக்கு அன்றயதினம்வரை தெரியாது. மாலதி என்னிடம் அன்று வந்து, நடந்த சங்கதியைக் கூறினாள். அதாவது,—தான் தற்போது நிராதரவான நிலைமையிலிருப்பதாகவும், தனக்கு உதவி செய்யும்படியும் கூறினாள். அவளுடைய குணம், தானாக உழைத்தாலொழிய வேறெவ்விதமாகப் பணம் கிடைத்தாலும் அவள் திருப்தியடையமாட்டாள். அதனால் நீ ஒரு காரியம் செய்ய வேண்டும். அதாவது அவள் பிரம்பு, வர்ணக்காகிதம், துணி இவற்றால் பல அற்புதமான சாமான்களைச் செய்யக்கூடியவள். அவளிடம் நீ சென்று, நான் கொடுக்கும் பணத்தைக் கொடுத்துவிட்டு அவள் செய்துவைத்திருக்கும் சாமான்களை வாங்கிக்கொண்டு, இன்னும் சில சாமான்களுக்கு உத்தரவு கொடுத்து முன் பணமும் கொடுத்துவிட்டு வா. இக்காரியம் உன்னால்தான் முடியவேண்டும். நீ ஒரு **உத்தமசீலன்** என்பது எனக்குத் தெரியும்" என்று மிகைப்படக் கூறி, அவளது இருப்பிடத்தையும் சொன்னார். இதுவரை இருண்டிருந்த எனது வாழ்க்கைக்கு **இன்பஜோதி**யைத் தந்த **ஞானதீபத்தைக்** காண விரைந்து சென்று அவளிருப்பிடத்தை அறிந்து என் மாமா கூறியதைப் போலவே செய்து முடித்தேன். அங்குத் தங்கிய சிலமணி நேரத்திற்குள் அவளது குடும்ப நிலவரத்தை நன்கு அறிந்துகொண்டேன்.

**சோதனையின் கொடுமை** நிறைந்த இம் **மாயப்பிரபஞ்சத்தில்** மாலதி ஒரு **அனாதைப்பெண்ணாக** விளங்கினாள். ஆனால் அவளுடைய பாலிய சினேகிதைகளான **சாருலோசனாவும் சன்பகவிஜயமுந்**தான் அவ்வப்போது ஆறுதலளிப்பவர்கள்.. அவர்களும் தற்போது புக்ககம் போய்விட்டதால் **மாலதி** தன்னந்தனியானாள். அவளது தந்தை **அனந்தசாகர்** அவளை மிகவும் கொடுமைப்படுத்தினார். அப்பேதை எல்லாவற்றையும் பொறுமையுடன் சகித்துவந்தாள். அவளை **சாந்தகுமாரி** என்றால் மிகவும் பொருந்தும். ஆனந்தசாகர் ஒரு நிரந்தர நோயாளி; அத்துடன் ஒரு கடனாளி, **படாடோபத்தின் பரிபவத்தை** நன்கு அநுபவித்தே அவர் கடனாளியானார். முன்பு ஆடம்பரவாழ்க்கையில் மிகுந்த குடும்பம் இப்பொழுது **பிச்சைக்காரக் குடும்ப**மாக—கடன்காரக் குடும்பமாக மாறி துயரக்கடலில் மூழ்கித் தத்தளிக்கிறது. **புத்தியே புதையல்.** அதில்லாமல் மனம்போன போக்கில் சென்று வாழ்க்கை நடத்தினால் கடனாளியாவதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அதேபோலத்தான் ஆனந்தசாகர். இப்படிக் கடனாளியாகவும், நோயாளியாகவும் உள்ள ஒரு தகப்பன், புத்திர **வாத்ஸல்யம்** அற்று தன் மகளின் நலத்தைக் கருதாததில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? **ஆனந்தசாக**ரின் சகோதரி, **ஸாரமதி**யம்மாள் விதவையாய் தனது புதல்வன் **ஸாரஸாராஜனு**டன் சொல்ப

பணத்துடன்தமயனிடம் வந்தடைந்தாள். ஆனந்தஸாகர் தனக்கு ராவ்பகதூர் திவான்பகதூர் முதலிய பட்டங்கள் வருவதற்காக பட்டமோ பட்டம்! என்கிற பேராசைகொண்டு அதற்காக சகோதரியின் பணத்தைச் செலவிட்டு அந்த மனஸ்தாபத்தால் அவர்களையும் துரத்திவிட்டார்.

ஆனந்த சாகர் துன்ப சாகரமாகக் காணப்பட்டார். எப்பொழுது பார்த்தாலும் தன் மகளிடம்—ஏன்? வந்தவர்களிடமும் கூடத்தான்—சிடு சிடுவென்று பேசும் சுபாவமுடையவர்; முன்கோபி.

நான் தனிமையில் மாலதியை சந்தித்துப் பேசினேன். அப்பொழுது அவளுடைய அனுதரவான தன்மை எனக்குத் தெரியவந்தது. அதாவது ஆனந்த சாகருக்குக் கடன் கொடுத்தவன் நவநீதகிருஷ்ணன் என்ற கிழவன். சுமார் 1700 ரூபாய் கடன். 'கொடுத்தால் கடனைக்கொடு; அல்லது மாலதியை மணம் செய்து கொடு' என்கிறான் இரக்கமற்ற அத்தொண்டுக் கிழவன். மிகவும் பரிதவிப்புடன் என்னிடம் கூறி முறையிட்டாள். இப்படிப்பட்ட ஜீவியச்சுழலில் அகப்பட்ட என் இதயராணிக்கு என் இதயத்தைத்திறந்துகாட்ட முயன்றேன். "நான் உனக்கு எந்த விதமான உதவி செய்வதற்கும் தயார். என் உயிரைக்கூட தியாகம் செய்வேன். என்னை உன் கீழ்ப்படிதலான ஊழியன் என்று இந்த நிமிஷத்திலிருந்து தெரிந்து கொள். உன்னை என் உயிருக்கு மேலாக பாவிக்கிறேன்" என்றேன்.

அவள் பதில் கூறாமல் நன்றியும் அன்பும் ததும்பிய பாவனையில் என்னை நோக்கினாள். அவள் முகம் சந்தோஷமலர்போல விளங்கிற்று. அவள் உள்ளம் ஒரு கருணாலயம். தூய க்ருபாமந்திரம்: அதில் நான் குடிகொண்டுவிட்டேன் என்று குதூகலித்தேன்.

சில நாட்கள் சென்றன. நான் உத்திரவிட்ட சாமான்களை வாங்கிவர மாலதியின் வீட்டிற்குச்சென்றேன். அங்குச் சென்றபொழுது காரியம் மிஞ்சி விட்டதை அறிந்தேன். வேறு வழி இல்லாமல் கிழவனுக்கே மாலதியைக் கொடுக்க எல்லா ஏற்பாடுகளும் ஆகியிருந்தன. 'இதை ஏன் எனக்கு முன்னமேயே தெரிவிக்கவே இல்லை?' என்று மாலதியைக் கேட்டேன். அவளது தகப்பனின் தொந்தரவும், வாழ்க்கையில் தனக்கு ஏற்பட்ட வெறுப்பும் அப்படி தெரிவிக்க இடம் கொடுக்கவில்லையாம். என் நிலைமை சகிக்க ஒண்ணாத துயரத்திற்கு வந்துவிட்டது.

இதைக் குறித்து ஆனந்தசாகரிடமே கேட்டேன். அவர், "உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போயேன்." என்று சீறிவிழுந்தார். பயனில்லை யென்று கிழவனிடம் ஓடினேன். அவன் அப்பொழுதுதான் மாப்பிள்ளையாவதற்குரிய வேஷப்பொருள்களைத் தயாரித்துக்கொண்டிருந்தான். அவனிடம், "உங்களுக்குச் சேரவேண்டிய பூராத் தொகையையும் நீங்கள் குறிப்பிடும் நாளுக்குள் கட்டி விடத் தயார். பாவம்! ஒரு இளம் பெண்ணின் வாழ்க்கையைமட்டும் கெடுக்காதீர்."என்றேன். நான் எந்த தைரியத்துடன் பேசினேன் என்றால், இந்த மோசமான சங்கதியை என் மாமாவிற்குத் தெரிவித்தால் அவர் அவ்வபலையைக் காப்பாற்ற எதுவும் செய்வார் என்று திடமாக எண்ணினேன். அவருக்கு 1700 ரூபாய் பெரிய தொகையல்ல. ஆனால் அக் கிழவன் என்னைப்பார்த்து சிரித்தானே தவிர, பதிலளிக்கவில்லை.

"உங்களுக்குச் சேரவேண்டிய தொகை பூராவும் வராது என்று நினைக்கிறீரா? வட்டிக்கு வட்டியுடன் வந்து சேரும். மாலதியின் நண்பர்கள் கொழுத்த பணக்காரர்கள், தெரியுமா? சிலர் உயிரைக்கூடக் கொடுக்கத் தயங்கமாட்டார்கள்!" என்றேன். ஆனால் அவன் என்னைப் பிடித்து, இழுத்துக்கொண்டு போய் வெளியில் விட்டுக் கதவைத் தாளிட்டுக்கொண்டதுதான் பிரதி பதில்.

நான் நேரே என் மாமாவிடம் சென்று விஷயத்தை வெளிப்படுத்தினேன். அவர் சொன்ன இரண்டு உபாயங்களைக் கையாண்டேன்.

மீண்டும் அக் கிழவன் வீட்டிற்குப் போனேன். அவன் என்னைக் கண்டு முகம் சுளித்தான். நான் அதைப் பொருட்படுத்தாமல், "நீங்கள் மாலதியை

மணம் செய்துகொள்வதில் யாதொரு ஆக்ஷேபனேயுமில்லே. ஆனல் ஒரு பத்திரம் எழுதிக் கையெழுத்திட்டுக் கொடுக்கவேண்டும்'' என்றேன்.

''நீ யார் என்னிடம் பத்திரம் கேட்க ?'' என்ருன் கண்களே அகல விரித்து.

''நான் மாலதியின் நெருங்கிய உறவினன். **சாமளநாதரின்** ஏகபுதல்வன். பத்மசுந்தரரைப்பற்றி உமக்குத்தான் நன்ருகத் தெரியுமே! அவர் என் மாமா. அவருடைய வளர்ப்புப் புத்திரிதான் மாலதி! அதில் எனக்கும் பாத்தியதை இல்லேயா ?'' என்றேன்.

இதைக் கேட்டதுதான் தாமதம். கிழவன் இடியோசை கேட்ட நாகம்போல திடுக்கிட்டு நடுங்கினன். தானகப் பத்திரத்தை எழுதிக்கொடுத்தான். அதாவது தான் மாலதியை மணப்பது உறுதி என்றும், அவள் தகப்பனுடைய கடன் ரூபாய் 1700 ஐ இனித் தான் கேட்கப்போவதில்லே என்றும், உடனே கடன் பத்திரத்தைக் கிழித்தெறிந்துவிடுவதாகவும் எழுதினன்.

இரண்டு நாட்கள் சென்றன. இரண்டாவது உபாயத்தை ஆரம்பித்தேன். அக் கிழவனிடம், ''மாலதி நற்குணவதி; அழகி; பொறுமைசாலி; உம்மை மணக்க மிக்க ஆவலாக இருக்கிருள்'' என்றேன். அப்பொழுது அக் கிழவன் முகத்தைப் பார்க்கவேண்டுமே!

''அது எனக்குத் தெரிந்ததுதானே !'' என்ருன் அசட்டுச் சிரிப்புடன்.

''இருக்கலாம் ஆனல் உமக்குத் தெரியாதது ஒன்று உண்டு.''

''என்ன ?''

''மாலதிக்கு மோகினி, டாகினி முதலியவை பிடித்து ஆட்டுகிறதாம்'' என்றேன். கிழவன் வெலவெலத்துப் போய்விட்டான்.

''ஐயோ ! உண்மையாகவா ? இந்தப் பெயர்களேச் சொல்வதற்கே எனக்கு பயமாயிற்றே. இவைகள் பிடித்த பெண்ணே எப்படிக் கட்டிக்கொள்வேன் ! இது உண்மைதான! அவள் எனக்கு மங்களத்தை அளிக்கக்கூடிய **'மங்கள பாரதி'**என்றுநினேத்தேனே!மோகினி பிசாசுபிடித்தவளா !''என்றுபிரலாபித்தான்.

''அதென்னமோ ஊரில் எல்லோரும் பேசிக்கொள்கிருர்கள்; நானும் அப்படித்தான் நினேக்கிறேன். மந்திரவாதிகளாலும் கூட அவைகளே ஓட்டமுடியவில்லே. ஆண்பிள்ளேகளேக்கண்டால் அம்மோகினிக்கு உக்கிரம் ஜாஸ்தியாகிறதாம். மாலதியை மணந்துகொள்பவரை அது சும்மாவிடாது என்று சொன்னர்களாம். நேற்றுக்கூட அவளிடம் மோகினி ஓட்டவந்த **'பரிமளகேசவன்'** என்கிற பெரிய மந்திரவாதியின் கழுத்தைப்பிடித்து அமுக்கிப் படாதபாடு படுத்திவிட்டதாகக் கேள்வி !'' என்று, அவன் முகத்தைப் பார்த்துக்கொண்டேன்.

''அடபாவி ! என்னே அவளப்பன் ஏமாற்றியாவிட்டான் ! அவனேச் சும்மா விடுவதில்லே. அப்படியென்ருல் பணத்தையாவது கறக்கிறேன் அவனிடம்,'' என்று குதித்தான் கோபத்துடன்.

''அன்று எழுதிக்கொடுத்த பத்திரம்?'' என்றேன்.

''பத்திரமா ! அட ராமா ! ஆனல் நான் கெட்டேன? என்னேவந்து எந்த மோகினியும், டாகினியும் பிடுங்கித்தின்னுதா !'' என்று கதறினன்.

பிறகு அப்பத்திரம் கிழித்தெறியப்பட்டது. அவனுக்குச் சேரவேண்டிய பணம் என் மாமாவால் தரப்பட்டது. அவனே ஏமாற்றி இருக்கலாம். என் மாமா இசையவில்லே. கடைசியாக என் இதயராணி—என் வாழ்க்கையின் **சுடர்விளக்கு,** என்னுள்ளத்தைக் கொள்ளேகொண்ட **வீரவஸந்தா** எனக்குச் சொந்தமானுள். **ஞானதீபம்** எங்கும் ஒளிவிட்டுப் பிரகாசித்தது, **மோகினியின்** கிருபையால்; நாங்கள் சந்தோஷமாக இருக்கிறேம். என் மாமாவின் உதவியால் **ரத்னமாலா** என்கிற பெயரால் ஒரு புத்தகசாலே ஆரம்பித்து சொந்தமாக நான் நடத்திவருகிறேன். நீங்களும் அதில் ஆர்டர் கொடுத்து உதவி செய்யுங்கள்.

---

ஸ்ரீமதி. C. R. ஸரோஜா

# வரப் பிரசாதம்

ஐந்தாறு வருஷங்களுக்கு முன் நில விஷயமாய்ப் பூந்தோட்டம் சென்ற என் தந்தையுடன் நானும் போயிருந்தேன். உத்தியோக அலுவல்களால் என் தந்தை காவிரி தீரத்தைவிட்டுச் சென்னைக்கு வந்துவிட்டமையால், காவிரியோடு நெருங்கிப் பழகும் பாக்கியத்தை நாங்கள் சிறுவயதிலேயே இழந்துவிட்டோம். எங்கள் கிராமமே எனக்கு மறந்துபோயிருந்தது. ஊரில் அல்லி மலர்கள் நிறைந்த குளமும், சிவாலயமும், தெருக்களும் ஏதோ கனவு கண்டவைபோல் என்முன் திட்டு திட்டாகச் சில சமயம் வருவதுண்டு. கனவில் கண்டு களிக்கும் தோற்றத்தைப் போலிருக்கும் அவைகளை நேரில் காண அப்பாவுடன் பிடிவாதமும் பிடிக்கவேண்டியிருந்தது. பூந்தோட்டத்தில் சுப்பராம சாஸ்திரிகள் அகத்தில் இருக்கும் ஒரு திவ்யமான ராமபட்டாபிஷேக படத்தைப்பற்றி வாய்க்கு வாய் அப்பா சொல்லிக்கொண்டிருப்பார்.

"அந்தமாதிரி ஒரு படத்தைப் பாரதபூமி பூராவும் தேடினால்கூடக் கிடைக்காதம்மா! அவ்வளவு வரப்பிரசாதத்துடன் எழுதி அமைந்த சித்ரம் அது" என்று மெய்மறந்து அவர் சொல்லும்போதெல்லாம் இப்பொழுதே பூந்தோட்டம்போய் அந்தச் சித்திரத்தைப் பார்த்துவிடமாட்டோமா என்ற ஆவல் அங்கு கரையில்லாமல் எழும். உண்மையாகவே பூந்தோட்டத்தை அடைந்தபோது எங்கு பார்த்தாலும் ராம படங்களாகவே என் கண்முன் மின்னி மறைந்தன.

என் தொந்தரவு—ஆசைகூட—பொறுக்க முடியாமல் மற்ற அலுவல்களைத் தள்ளிப் போட்டுக்கொண்டு அப்பா என்னை சுப்பராம சாஸ்திரிகள் அகத்துக்கு அழைத்துக்கொண்டுபோனார். அப்பொழுது உதயமாகவில்லை. இன்னும் சிறிது நேரத்திற்குள் உதயம் ஆய்விடும் என்பதற்கு அறிகுறியாய் அபூர்வ ஒளி ஒன்று இருளைக் கழிகொண்டு விரட்டிக்கொண்டிருந்தது. சிவாலயத்திலிருந்து பிராதக்காலப் பூஜையின் மணி ஓசை கேட்டது. பசுக்களும், கன்றுகளுமாக இடையர்கள் தெருவில் போய்க்கொண்டிருந்தார்கள். ஸ்திரீகள் முத்து முத்தாகக் கோலம்போட்டுக்கொண்டிருந்தார்கள். தூங்கிவழிகிற ஒரு ஜீவனையும் அங்கு காணோம்.

சுப்பராம சாஸ்திரிகள் அகத்து வாயிற்படியில் காலைவைத்ததும் 'கண கண' வென்று மணி ஓசை எங்களை உள்ளே வரும்படி அழைத்தது. "சாஸ்திரிகள் பூஜை செய்கிறார்" என்று அப்பா பயபக்தியோடு மேல் வேஷ்டியை எடுத்து இடுப்பைச் சுற்றி கட்டிக்கொண்டே உள்ளே நுழைந்தார்.

பால ரவியின் ஒளி அறை முழுதும் பரவ, பல புஷ்பங்களின் வாசனையோடு அந்த பூஜை அறை காணப்பட்டது. என் தந்தை என் மனத்துள் கனவு அலைகளை எழுப்பி வந்த ஸ்ரீராம படம் பெரிய மந்த ஹாஸத்தில் காணப்பட்டது. படத்தின் தேஜஸை எடுத்துக்காட்ட அங்கே மின்சார விளக்கு இல்லைதான். ஆனாலும், குத்துவிளக்குச் சுடரே வெட்கிப்போகும்படியாய் அதன் தேஜஸ் அந்த அறை பூராவும் வியாபித்திருந்தது. சாஸ்திரிகள் கண்ணை மூடி தியானத்தில் இருந்தார். அனுபவத்தால் முதிர்ந்ததோடு வயதிலும் முதிர்ந்த சரீரம் ஸ்ரீராமனிடம் கொண்டிருந்த அளவற்ற பிரேமையால் அவர் முகம் காந்தி பெற்று விளங்கியது. மௌனமே குடிகொண்டிருந்த அவ்வறையில் சிறிது நேரம் நாங்கள் மெய்மறந்து நின்றிருந்தோம். சாஸ்திரிகள் கண்விழித்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து நிமிர்ந்து என் தந்தையை நோக்கினார்.

"வா, அப்பா! ராமசந்திரா" என்று அன்பையெல்லாம் திரட்டி அழைத்தார். அப்பா பகவானுக்கும் அவருக்கும் நமஸ்காரம் செய்து நிமிர்ந்தபோது அவர், "இவள்தான் உன் பெண்ணோ?" என்று கேட்டார்.

"ஆமாம், உங்கள் படத்தைப் பார்க்கவேண்டும்'' என்று தொந்தரவு செய்த தின்பேரில் அழைத்துவந்தேன்.

"போய் அருகில் பாரம்மா! சிறு வயதிலேயே பக்தி ஏற்படுவது நல்லது. ஸ்ரீராமன் அருள் பெற்று தீர்க்க சுமங்கலியாய் இரு'' என்று ஆசீர்வதித்தார். சாஸ்திரிகள் மனம் பக்தியால் பக்குவமடைந்திருக்கிறது என்பதை அவர் பேச்சும், வினயமும் காண்பித்துவிட்டன.

"இந்த ராம சித்திரம் உருவான வரலாற்றைச் சொல்லவேணும்'' என்று அப்பா கேட்டுக்கொண்டதின்பேரில் சாஸ்திரிகள் ஆரம்பித்தார்.

## 2

ஏறக்குறைய ஐம்பது வருஷங்களுக்குமுன் என் அத்தான் கிருஷ்ண சாஸ்திரிகளின் எழுதிய படம் இது. கிருஷ்ணன் என்னைவிட பத்து வயது மூத்தவன். சிறு வயதிலிருந்தே படங்கள் எழுதுவதில் நல்ல ஆஸ்தை உண்டு அவனிடம். அவனுக்குப் பதினைந்து வயது நிரம்பியதும், இந்த ஊர் சிவாலய உத்ஸவ மூர்த்தியை ரிஷபவாகன ரூடனாய் எழுதிப் பெரிய மகான்களின் ஆசியை பெற்றவன். சிறுவயதிலிருந்தே கவிதை, ஓவியம் இரண்டிலுமே மனதை லயிக்கவிட்டு, காவியத்தை அவனால் ரஸிக்க முடிந்ததே தவிர கவிதை எழுத வரவில்லை. ஒரு தினம் கம்பனின் பாடல் ஒன்றை ஊன்ற ஊன்றப் படித்தான். திடீரென்று என்ன தோன்றியதோ ராமன் விசுவாமித்திரனுடன் தாடகை சம்ஹாரத்துக்குப் போகும் காக்ஷியைக் கவிதையை வைத்துக்கொண்டே சித்திரமாய் எழுதி விட்டான். இளஞ் சூரியன்போல் விளங்கும் சூரியகுல சிங்கங்களைத் தன் சித்திரத்தில் பார்த்துப் பார்த்து அன்று பூராவும் கண்ணீர் பெருக்கிக்கொண்டிருந்தான். அவனிடம் ஒரு விசேஷ குணமுண்டு. தன்னைவிடப் பெரியவர்கள் அநேகர் இருக்கிறார்கள். அவர்களிடம் தன் வித்தையைக் காண்பித்து பெருமையடையத் தான் எந்த விதத்திலும் ஏற்றவனல்ல என்பதுதான் அந்த எண்ணம். சித்திரம் எழுதுவதும் தனிமையில்தான். இந்த அறை ஒதுக்குப் புறமாய்த்தானே இருக்கிறது? இது பூஜைக்கு லாயக்கில்லைதான், ஆனால்... இருக்கட்டும். விஷயம் பூராவும் சொல்லிவிட்டு அறையைப் பற்றி சொல்லவேணும் உனக்கு'' என்று சாஸ்திரிகள் மேலும் ஆரம்பித்தார்.

அவன் எழுதிய சித்திரத்தைக் கண்டு மனம் களிப்பதும் தனிமையில்தான். கூட நான் இருப்பதுண்டு. என்னைமட்டும் தன்னுடன் இருக்க அனுமதித்தான்.

கம்பன் கவிதைகளைப் படிப்பதும் உடனே சித்திரம் எழுதுவதும், அவைகளைப் பார்த்துக் கண்ணீர் பெருக்கி மெய்மறந்து போவதுமே அவன் தினசரி தொழிலாய்ப் போய்விட்டது. அகத்தில் பெரியவர்கள் எங்கள் இருவரையும் கடிந்துகொள்வர்கள்.

"ஊரிலே ஒரு வேலைக்கும் துப்பு கிடையாது. வீட்டுக்குள்ளயே நீயும் உக்காந்துண்டு என்னடா செய்யறே சுப்பராமா'' என்று என் அத்தை கோபித்துக் கொள்வாள். அறைக் கதவைக் கிருஷ்ணன் திறந்தால்தானே?

"நீ வேண்டுமானால் போடா, என்னால் இப்பொழுது வரமுடியாது'' என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிடுவான். அந்த சமயங்களில் அவன் எழுதிக்கொண்டிருந்த சித்திரங்களின் முழு வனப்பையும் கண்டுகளிக்க முடியாமல் அத்தைக்குப் பயந்து வெளியே போய்விடுவேன்.

"பையனுக்குக் காலாகாலத்தில் ஒரு கால்கட்டைக் கட்டணும், அவனோ படம் எழுதறதே கதியாய்க்கிடக்கறான், நீங்களோ அவனைக்கவனிக்கிறதேயில்லை'' என்று தன் பர்த்தாவின்மீது தன் கோபத்தைக் காண்பித்துவந்தாள் அத்தை.

"அவனவன் கர்மாவின்படி நடக்கப்போகிறது. நீயேன் சங்கடப்படுகிறாய்?'' என்று அத்திம்பேர் அவனுக்குத் தேறுதல் சொன்னால் வீட்டில் ரகளைதான்.

அவன் மனதைக் கொள்ளைகொண்ட ஸ்ரீராமன் அப்பொழுது அவன் கையில் கல்யாணகோலத்தில் அமர்ந்திருந்தான். சீர்காழியில் பெரிய மிராசுதார்

ஒருவர் தன் பெண்ணை இந்த ராமபக்தனுக்குக் கொடுக்க முன்வந்தார். கல்யாணம் வெகு விமரிசையாய் நடந்தது. கிருஷ்ணனின் மனைவி ஸ்வர்ணம் அசல் ஸ்வர்ணம்தான். தன் பர்த்தாவின் மனம் கோணுமல் நடந்து, அவன் எழுதிய சித்திரத்துக்கு உடனிருந்து ஏதாவது திருத்தங்கள் சொல்லுவாள்.

'பிள்ளை சரியில்லை' என்ற ஏக்கத்தால் அத்தையும், அத்திம்பேரும் அடுத் தடுத்துச் சில வருஷங்களில் இறந்துவிட்டார்கள். ஊரிலிருந்த நிலம் புலன்களில் வரும் வரும்படி லாபமா நஷ்டமா என்பதையும் கவனிக்காமல் ஸ்ரீராமன் கதையைச் சித்திரமாக வரைவதையே தொழிலாகக்கொண்டான்...என்று சாஸ்திரிகள் படத்தைப் பார்த்து யோசனையில் ஆழ்ந்தார்.

"அப் படங்களெல்லாம் இப்பொழுது எங்கே?" என்று ஆவலுடன் கேட்டேன்.

"பொறு அம்மா! இந்த திவ்யமான படம் அமைய இருக்கும்போது, அவைகளைக் கேட்ட நண்பர்களுக்குக் கொடுத்துவிட்டான். அவர்கள் வாழ்க்கைப் பாலத்தை இன்னும் பலமாக இணைக்கும்படி குழந்தை ஒன்றும் இல்லை. ஸ்வர்ணத்திற்கு அது பெரிய குறையாய்த்தான் இருந்தது.

## 3

அந்த வருஷம் ஸ்ரீராமநவமி உத்ஸவம் வழக்கம்போல் ஆரம்பமாயிற்று. கிருஷ்ணன் அகத்தில் ராமாயணக் காலக்ஷேபமும் ஆரம்பமாயிற்று. கம்பனின் கவிதைச்சுவையை ஊரில் உள்ளவர்கள் அனுபவித்தார்கள். ஆனல், புராணிகருக்கு அடுத்தாற்போல் இருக்கும் அறையில் கிருஷ்ணன் உட்கார்ந்து புராணிகர் ஒவ்வொரு கவிதையை விளக்கிச் சொல்லும்போது மெய்மறந்து கை என்ன எழுதுகிறது என்பது புரியாமல் கவிதை இன்பத்தில் கடைந்து அநேக ஓவியங்களைத் திரட்டினன். சித்திரங்கள் ஒன்றை ஒன்று வென்றுவிடும்போல் களை சொட்ட அமைந்திருந்தன.

ராமாயணக் காலக்ஷேபம் முடியும் நாள்; மறுதினம் பட்டாபிஷேக வைபவம், முதல்நாள் இரவு கிருஷ்ணனின் பேச்சு, செயல் யாவும் அதிசயமாய் இருந்தன. வீட்டில் ஸ்வர்ணம்மட்டும் பட்டாபிஷேக வைபவத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தாள். கிருஷ்ணன் அறையிலிருந்து வெளியே வரவில்லை, அது அவள் மனதுக்குக் கொஞ்சம் வருத்தமாயிருந்தது என்று எனக்குத் தெரிந்தது.

"உங்கள் அத்தானை நாளை வைபவத்தில் மட்டும் கலந்துகொள்ள முயற்சி செய்யுங்கள்" என்று ஸ்வர்ணம் என்னிடம் சொன்னுள்.

"அம்மா! அவன் நிழல்போலிருந்து சேவை செய்யும் உன் வார்த்தையை விட என் சொல்லைக் கேட்பானு அவன்?" என்று நான் பதில் சொன்னேன்.

பட்டாபிஷேக வைபவம் சுபவேளையில் ஆரம்பமாயிற்று.

"ஹரே ராம்" என்று ராமநாமம் வீடு பூராவும் ஒலிக்கவே கிருஷ்ணன் எழுந்து வெளியேவந்து சற்று பிரமித்து பட்டாபிஷேகத்துக்காக வைத்திருந்த படத்தைப் பார்த்துப் புன்னகை புரிந்துகொண்டே உள்ளேபோக யத்தனித்தான்.

"கிருஷ்ணு! இப்படி உட்காரப்பா" என்று புராணிகர் அழைத்தார். அவன் புன்னகையோடு சென்று தன் அறைக் கதவைத் தாளிட்டான்.

ஸமாராதனை எல்லாம் முடிந்து, இரவு வைபவங்கள் முடிந்துவிட்டன. ஸ்வர்ணம் தன் பர்த்தாவுக்காகப் பால் எடுத்துக்கொண்டு கலை நிரம்பிய அவ்வறைக் கதவைத் தட்டினுள். "யார்? ஸ்வர்ணமா? வா" என்று கிருஷ்ணன் கையைப்பிடித்து உள்ளே அழைத்துக் கொண்டுபோய்க் கதவைத் தாளிட்டுக் கொண்டான். இந்தச் செய்கை எனக்கு வியப்பை அளித்தது.

ஸ்வர்ணம் பகலெல்லாம் வேலை செய்த களைப்பால் அயர்ந்து தூங்கிவிட்டாள். கிருஷ்ணன் தான் எழுதிவந்த பட்டாபிஷேகப்படத்தின் திரையைநீக்கினன்.

"பரதா! சரியாய் நின்று சேவை செய்" ஹே, அஞ்சனபுத்திரா! பாத தூளியைச் சிரசில் நீ மட்டும் தரித்துக்கொள்ளுகிருயே! ஜய ஜய ராம்" என்று கத்துவதைக் கேட்டு ஸ்வர்ணம் விழித்து எழுந்து பார்த்தாள். தன் கணவன்

சிரம்மேல் கைகூப்பி கண்கள் நீரைச் சொரிய நின்று ராம மந்திரத்தை ஸ்மரிப்பதைக் கண்டாள். எதிரே கலையின் சிகரத்தை அடைந்த பட்டாபிஷேகப்படம் கண்களைப் பறித்தது.

“ராமா! நானும் வருகிறேன்.” என்று கிருஷ்ணன் தடதடவென்று கதவை நோக்கிஓடினான். கீழே தடாரென்றுவிழுந்தவனை ஸ்வர்ணம் மடியில் தாங்கிக் கொண்டாள்.

உஷக்காலத்தில் சகல ஜீவன்களும் தெய்வ அருளைப் பாடித் துதித்திடும் நேரத்தில் ஸ்ரீராம சன்னிதானத்தில் கிருஷ்ணன் பகவானை அடைந்தான். அந்த உத்தமி வைதவ்ய கோலத்துடன் அதிக நாள் இருக்கவில்லை,

அவள் அந்தியகாலத்தில் என்னிடம், “இந்தப் படம் உலகின் ஐச்வர்யம் அத்தனைக்கும் ஈடாக நிற்காது, இதற்கு ஈடு இதுவே. என் பர்த்தா வரப்பிரஸாதத்தால் ஸ்ரீராமனின் பட்டாபிஷேகக் கோலத்தைக் கண்ணால் கண்டு களித்து எழுதிய சித்திரமிது. உங்களிடம் நம்பிக்கை இருப்பதால் இதை உங்களிடம் விட்டுச் செல்கிறேன்” என்று என்னிடம் அளித்தாள்.

அந்த பக்த தம்பதிகளின் ஆசியால் படத்திற்கு இன்றுவரையில் ஒரு குறையும் வைக்கவில்லை. நான் முதலில் சொன்னேனே, பூஜைக்கு இந்த அறை ஒதுக்குப்புறமாயிருந்தாலும் இதையே உபயோகித்து வருகிறேன் என்று; இதில் தான் என் அத்தான் பல அருமையான படங்களை, எழுதியது, இங்கேதான் அவன் ஆத்மா ஈச்வரனை அடைந்ததும், இந்த அறையின் மகத்துவம் கொஞ்சநஞ்சமல்ல” என்று ஆனந்தபாஷ்பம் சொரியக் கூறி முடித்தார் சாஸ்திரிகள்.

என் முன் கிருஷ்ண சாஸ்திரிகளின் வாழ்க்கை பூராவும் தோன்றி மறைந்தது. “அந்த பக்தரின் அறைக்குள் இருக்கிறோம்” என்று புளகாங்கிதமடைந்தேன்.

“ஆஹா! அந்தப்படம்! அது வரப்பிரசாதம்தான் என்பதில் சந்தேகம் இல்லை.

---

“இனியன்”

# நீதி சாரம்

1. சிலர் வெறுங்காலோடு சங்கீதக் கச்சேரிக்குச் சென்று வீட்டிற்குத் திரும்பும்போது புது ஜோடி செருப்புடன் காட்சியளிக்கிறார்கள். ஐயோ விதியே! இதுவும் ஒரு பிழைப்பா!

2. “நீங்கள் யுத்தத்துக்கு 10 ரூபாய் கொடுங்கள் பரவாயில்லை சார்”... என்று தம் சிநேகிதருக்கு மட்டும் சிபார்சு பலமாகச் செய்துவிட்டு, தம்மிடத்தில் அதே முறை வரும்பொழுது, வந்தவரிடம் பெரிய யுத்தமே புரிந்து விடுகிறார்கள் சிலர். தங்களுக்கு ஒரு நீதி; மற்றவருக்கு அதே அநீதியா!

3. வீட்டில் கொஞ்சம் தங்க வசதி இருக்குமாவென்று கேட்டு, இளைப்பாறி மறுநாள் காலையில் பார்க்கும்போது பீரோவில் வைத்திருந்த ஒரு தங்க சங்கிலி காணாமல் போகிறது. “அபடா...என்ன பிசகு செய்தோம்! ஏன் இடம் கொடுத்தோம்?” என்றாகிவிடுகிறது. அவர் கேட்டது தங்க வசதிதானே! நாம் கொடுத்ததும் அதுதான்...பிறகு வருத்தப்பட்டுப் பயனென்ன?

4. ‘ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதியா?’ என்றார் பாரதியார். ஆனால் இந்த உலகில் ஆளுக்கொரு நீதி இருக்கும்பொழுது, பார்தி சொல்வதில் வியப்பென்ன இருக்கிறது?

5. சிறந்த புத்தகம் வேண்டுமென்று ஓயாது தேடுபவர்க்கும், சிறந்த மணமகன் வேண்டுமென்று அலைந்து திரிபவர்க்கும், ஒரு கிழிந்த காம சாஸ்திரமும் ஒரு சொத்தைப் பிள்ளையும்தான் கிடைக்கிறது. காலத்தின் கோலமல்லாது வேறென்ன இது?

# 22

போர்க்களத்தே நாரணன்றான் என்ற கண்ணு போற்றி!
போர்க்களத்தே ஸாரதியாய் அமர்ந்த கண்ணு போற்றி!
போர்க்களத்தே சங்கநாதம் புரிந்தகண்ணு போற்றி!
போர்க்களத்தே வெற்றிமாலே யணிந்த கண்ணு போற்றி!

என்கிற பாடலே உபாத்தியாயினி சொல்லிக்கொடுக்க மாணவிகள் வெகு நேர்த்தியாகச் சேர்ந்து பாடினர்கள். இதைக் கேட்கும்போது உபாத்தியாயினியின் முகம் சற்று வாட்டமடைந்து சில வருடங்களுக்குப் பின்னல் இழுத்துச் சென்றது. "உம்... கிருபாவதிக்குப் பிறகு அத்தகைய கம்பீரமான சங்கீதம் ஒருவரிடமும் இல்லே. அவள் ஸ்தானத்திற்கு வரக்கூடியவர்கள் யாருமே இல்லேயே என்றுதான் வருந்துகிறேன். அடாடா! முந்தாநாள் அவள் ரேடியோவில் பாடினள். தேவகானமென்ருல் மிகையாகாது.அத்தகைய ஆச்சரியமாயமைந்தது. பாவம். அவளேப் பார்த்தே வெகு காலமாய்விட்டது. பார்க்கவேணும்போல் ஆசையாயுமிருக்கிறது. பெத்த தாயாரையே கிட்டச்சேரவிடாது அலக்ஷியம் செய்யும் பிசாசுகளிடமல்லவா அவள் அகப்பட்டுக்கொண்டாள்!" என்று சிறிது வருத்தத்துடன் கூறினள்.

அங்குள்ள டீச்சர்களில் ஒருத்தி "சகோதரி! நான் முதலிலேயே சொல்ல வேண்டுமென்று வந்தேன்; மறந்துவிட்டேன். கிருபாவதி இப்போது இந்த ஊருக்கு வந்திருக்கிருள். அவளுடைய தாயார் நேற்றிரவு இறந்துவிட்டாளாம் பாவம். இழுத்துக்கொண்டிருக்கையில் கிருபாவதியை அழைத்துக்கொண்டு அவள் கணவனே வந்திருக்கிருராம். கிருபாவதியின் குழந்தை வெகு வெகு அழகாயிருக்கிறதாம்...

இதைக்கேட்ட பாட்டு வாத்தியார், "ஐயோ! ராஜம்மா இறந்துவிட்டாளா! அடடா!... ஒரே பெண்ணேப் பெற்றும் சுகப்படாத ஜென்மமாகிவிட்டது. ஏதோ! அதிக கஷ்டப்படாது போய்விட்டாளா!... நான்போய் கிருபாவதியைப் பார்த்து விட்டு வரப்போகிறேன். என்னிடம் சங்கீதம் பயின்ற மாணவிகளில் கிருபாவதி ஒருத்திதான் எனக்கு ஆத்மார்த்தகமான ஆனந்தத்தை அளித்தாள். அவளுடைய ஸ்தானத்திற்கு யாராவது வரமாட்டார்களா என்றுதான் தினம் சிந்திக்கின்றேன்" என்று கூறி அன்று பள்ளிக்கூட நேரம் கடந்ததும், கிருபாவதியைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டாள்.

காரில் வெகு விரைவில் வந்து சேர்ந்த கிருபாவதி தன் தாயாரின் பரிதாப நிலேமையைக் கண்டதும் இதயம் துடிதுடித்து 'அம்மா!' என்று ஆனே வீறிடுவது போல் வீறிட்டாள். கிழவிக்கு ஸ்வாஸம் துரத்தித் துரத்தி வாங்கும்போதுகூட நல்ல நினேவு இருந்ததால் அடிக்கடி "கிருபாவதீ... கிருபாவதீ... ஐயோ! உன்னே ஒரு பிச்சைக்காரனுக்குக் கொடுத்திருந்தால் நான் எவ்வளவு சந்தோஷமாக இருந்திருப்பேன். இந்த மரணத்தறுவாயில் நீ என் பக்கலிலிருந்து ஒருவாய் தண்ணீரை ஊற்றி என் ஆத்மாவை சாந்திசெய்திருப்பாயே!

என் கண்ணே! உன்னேப் பணக்காரர்கள் என்கிற பாழுங்கிணற்றில் தள்ளிக் கொலேசெய்துவிட்டேனே! இனி உலகத்தில் என்னேப்போன்ற தகாத சம்மந்தம் யாருமே செய்து ஏமாறவேண்டாம், பிச்சைக்காரருக்குள்ள சுதந்தரமும் சந்தோஷமும்கூட என் குழந்தைக்கு இல்லாதுபோயிற்று... தகாத சம்மந்தம் பாழுங் கிணற்றுக்குச் சமானம். படுகுழிக்குச் சமானம். என் கிளியை வளர்த்துப் பூனேயிடம் கொடுத்துவிட்டேன். இனிமேல் கண்ணுல் பார்ப்பதேது... என்று பிதற்றுவதைக் கேட்டுக்கொண்டுதான் மூவரும் உள்ளே நுழைந்தார்கள்.

இம்மாதிரி இவர்கள் வருவார்கள் என்று கனவுகூடக் காணவில்லேயாதலால் சதாசிவம் தன் கண்களே நம்பவே இல்லே. ப்ரமித்துப்போய், "வாருங்கள். வாருங்கள்... ராஜம்!... அதோ மாப்பிள்ளே சம்மந்தி கிருபாவதி எல்லோரும் வந்திருக்கிருர்கள் பாரு... ராஜம்!... இதோபாரு... குழந்தை... உன் பேத்தி!... உன்னருமை பேத்தி!"... என்று சந்தோஷமிகுதியால் தடமாடியவாறு கூறினர்.

அத்தனை ஸ்வாஸத்திலும், திணறலிலும் ராஜம்மாள் அலறியவாறு, "ஹா!... என் கண்மணி கிருபாவதியா! என் செல்வமணியா... நிஜமாகவா!"... என்று ஒருவித ஆவேசத்துடன் கண்ணை மலர விழித்துப் பார்த்தாள். பெத்த தாயின் உள்ளத்திலிருந்து பொங்கியெழும் உணர்ச்சிவெள்ளத்தின் மகிமையை என்னவென்று சொல்வது? "ஹா... கிருபாவதீ... வந்தாயா... எங்கே என் செல்லம்... கண்மணீ"... என்று அவளைக் கட்டித் தழுவி, குழந்தையை முத்தமிட்டாள்.

"கிருபாவதீ... கிருபாவதீ! உன் குழந்தையை ஒரு ஏழை ப்ரம்மச்சாரிக்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷமாக நடத்தி உலகில் உள்ள வித்யாஸ முட்டுக்கட்டையை உடைத்தெறிந்துவிடு... உன்னை நான் படுகிணற்றில் தள்ளியது போல் நீயும் உன் கண்மணியைத் தள்ளாதே... பணம்... பணம்... என்று பறக்காதே. குணம்... குணம்... என்று ஆராய்ந்து செய்... கண்ணூ... கிருபாவதீ!"... மீண்டும் தடுமாற்றம். சற்று மூர்ச்சையாகிக் கிடந்தாள்.

இவள் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் விச்வநாதன், முரளி இருவருடைய இதயத்திலும் பொத்துகிறது... விச்வநாதன் கண்ணில் நீர்முட்ட... "சம்மந்தியம்மா!" என்று அழைத்தார்... முரளி பக்கலில் ஊமைபோல் நின்றான்.

ஆனால் ராஜம்மாள் இவர்களை கண்திறந்து பார்க்கவும் இல்லை. பதில் கூறவும் இல்லை. சில நிமிஷங்கள் தத்தளித்தபின் ஸ்வாஸம் ஓய்ந்துவிட்டது. ராஜம்மாளின் பூபாரம் நீங்கியதை உலகிற்கு அறிவிப்பதேபோல் "அம்மா!" என்று கிருபாவதி வீறிட்டாள். எல்லோரும் வியக்குமாறு முரளியே கிருபாவதியைத் தேற்றினான் என்றால் ஆச்சரியம் வேறு வேண்டுமா!

சவச்சடங்கு முடிந்ததும், விச்வநாதன் கிளம்பினார். 'இனி இங்கு எனக்கென்ன வேலை? என் தாயார் நிம்மதியடைந்ததே எனக்கும் மனச்சாந்தியாகி விட்டது. இப்போதே அம்மா என்ன கோபிக்கின்றாரோ! என்ன விபரீதம் நடக்குமோ! ஆகையால் நான் வந்துவிடுகிறேன்"... என்று கிருபாவதி கூடவே கிளம்பினாள். முரளி எந்த பக்கமும் பேசத்தெரியாது திகைத்தான்.

சதாசிவம் முதலியவர்கள், பெத்த தாயின் ஈமக்ரியைகளைப் பூர்த்திசெய்யாது கூடப் போகலாமா! நீதானே கர்த்தா! நீதானே கர்மாதியை முடிக்கவேண்டும். வயிற்றில் பிறந்த தோஷத்திற்காகவாவது அந்த ஆத்மாவைக் கடைத்தேறச் செய்யவேண்டாமா? என்று கூறித் தடுத்தார்கள்.

**முரளி:**—கிருபாவதீ! என்பாடுதான் இப்போது தர்மசங்கடமாகிவிட்டது. காரியத்தை நம்ம ஊரிலேயே செய்துகொள்ளலாம் என்று தைரியமாகச் சொல்லவும் பயமாயிருக்கிறது. அம்மா அம்மாதிரிச் செய்வதற்கு என்ன அனர்த்தத்தை விளைவிப்பாளோ! உன்னைப் பிரிந்து போவதற்கும் என் மனது ஏதோ தவிக்கின்றது. நீ இத்தகைய நிலைமையில் தனிமையிலிருந்து சதா புலம்பிக்கொண்டிருந்தால் உன் உடம்பல்லவா கெட்டு, அழகு குலைந்துவிடும். குழந்தையும் இளைத்துப் பாழாகிவிடுமே... என்ன செய்வேன்? கிருபாவதீ! என் மனது ஏதோ தவிக்கின்றதே... உன் தாயின் மரணத்தறுவாயின் மொழிகள் என் இதயத்தைப் பிளக்கின்றனவே.

**கிரு:**... ஐயோ! அதை நீங்கள் பொருள்படுத்தவேண்டாம். ஏதோ மரணாவஸ்தையின் பிதற்றல். கோபிக்கக்கூடாது... நானும்கூட வந்துவிடுகிறேனே...

**மு:**—வேண்டாம். வீணான நிந்தைக்கு இலக்காகவேண்டாம். எப்படியோ பல்லைக் கடித்துக்கொண்டு காரியத்தை முடித்துவிட்டே வந்துவிடு. குழந்தையை ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளு. நான் அம்மாவுக்குத் தெரியாது நடுவில் வந்துபோகிறேன் கிருபாவதீ... உன் உடம்பு பத்திரம்... உன்னழகு ஜாக்ரதை... என்று கூறும்போது எப்போதும் அழகு அழகு என்று சொல்வதைக் கேட்க கிருபாவதிக்கு சற்று எரிச்சலாகவே இருந்தது.

குழந்தையைப் பல முத்தங்களிட்டுப் பின் கிளம்பினான். விச்வநாதனும், "கிருபாவதீ!... இந்தாம்மா 200 ரூபாய். காரியங்களைச் செவ்வையாகச் செய்து

முடித்துவிட்டு உடனே வந்துவிடு உன் உடம்பையும் குழந்தையின் உடம்பையும் ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளு. சதா அழாதே, இனி என்ன செய்துதான் என்ன உபயோகம்?'' என்று தைரியங் கூறினர்.

**கிரு:**—மாமா ...அம்மாவுக்குத் தெரியாது இந்த காரியம் செய்யக்கூடாது. பணத்தைக் கொடுக்கவேண்டாம். எப்படியோ காரியத்தை என் மாமா நடத்தி விடுவார்...இது வேண்டாம்...

**விச்:**—அவளைப் பற்றி நீ கவலைப்படவேண்டாம். இந்தா! வாங்கிக்கொள்ளு கண்மணி ப்ரேமாவை ஜாக்ரதையாகக் கவனித்து வா...முரளீ ! போகலாமா...

அடுத்த நிமிடமே கார் பறந்தது. கண்கெட்ட பிறகு சூர்ய நமஸ்காரம் செய்வதுபோல் பெத்த தாயின் உயிர் மறைந்தபிறகு இத்தனை தடபுடலும் உறவாடலும் சிரிப்பாகவே எல்லோருக்கும் தோன்றியது. ஆனல் கிருபாவதியின் நெஞ்சில்மட்டும் கூறத்திறமற்ற ஏதோ ஒரு திகில்...பயம்...திடும் திடும் என்கிற நடுக்கல் ஒன்றுகூடி வதைத்து வாட்டுகின்றன. அந்த புதிய பீதியின் வேகத்தை அவளாலேயே உணரக்கூடவில்லை. சொல்லமுடியாத சங்கடம் செய்கிறது. "இந்த புதிய கலக்கம் நன்மைக்கோ தீமைக்கோ தெரியவில்லையே!'' என்ற கலக்கம் இதயத்தில் புகுந்துகொண்டது.

## 23

தன்கீழ் வேலைசெய்யும் சமயல்காரியினலேயே தான் அடிபட்டும் அவமான முற்றும் நிற்பதென்ருல் இந்த இழிவை யார்தான் சகிப்பார்கள்? அதிலும் அகம் பாவதேவதையான ஸ்ரீமதி பார்வதியம்மாளால் சகிக்க முடியுமா! திருப்பி அடிக்க வேண்டும் என்று நினைத்துப் பார்ப்பதற்குள் கோமதி வீதிப்படிகளில் இறங்கிப் போவதையும், எதிரில் வேலைக்காரி வள்ளி நிற்பதையும் கண்டதும் பின்னும் ஆத்திரம் மூண்டது. திருடனுக்குத் தேள் கொட்டினல்...ஊமை கனவு கண்டால்...யாரிடம் சொல்வது...அதேகதிதான் பார்வதியம்மாளுக்கும்உண்டாகியது.

எதிரில் நிற்கும் வள்ளி பேசாமலிருக்கக்கூடாதா! 'ஏம்மா! அந்த சமயல் காரம்மாளுக்குஎன்ன கேடுகாலம் வந்திடுச்சு.ஏன் இப்படி திட்டிகினே ஓட்ருளே?' என்றும் கேட்டுவிட்டாள். அதை பார்வதியம்மாள் பொறுக்கமுடியுமா! தன்னுடைய மதிப்பும் கர்வமும் அப்படியே சிந்திவிட்டது போன்ற ஒரு தீராத வெட்கம் உண்டாகி ஒருபுறம் வதைக்கிறது. ஒருபுறமோ, கர்வம் தலைதூக்கி ஆத்திரமும் அகங்காரமும் தாண்டவமாடப் பொங்கி எழுந்து வதைக்கிறது. தன் சுய மதிப்பையும் விடமுடியவில்லை...ஏதோ ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "அப்படியா சமாச்சாரம்! திட்டிக்கொண்டு வேறு போகிருளா!...கையுங்களவுமாகப் பிடித்துவிட்ட வயிற்றெரிச்சலடீ அது...உள்ளே இருந்து ஒரு வீசை நெய்யும், இரண்டு வீசை சக்கரையும் எவனிடமோ கொடுத்து ரகஸியமாக அனுப்புவதை நான் பார்த்துக்கொண்டே வந்துவிட்டேன். 'இதென்ன பகல் கொள்ளையடீ!' என்று கேட்டேன். அவ்வளவுதான் ஓடிவிட்டாள். இந்த கழுதை இல்லாவிட்டால் இன்ஞெரு நாய் வருகிறது. இவளால்தான் வீட்டிற்கு வந்த மருமகளும் கெட்டுக் குட்டிச்சுவராகி வருகிறது'' என்று அடுக்கிக்கொண்டே போகிருளேயன்றி சமையல்காரியிடம் காலால் உதை வாங்கிய ஆக்ரோஷம் தீரவேயில்லை. அதொரு புறம் பலமாகத் தாக்கி வதைத்தவாறிருக்கிறது.

சமையல் உள்ளே சென்று எட்டிப்பார்த்தாள். அடுப்பில் சாதம் கொதிக்கிறது. ஒரு குமட்டியில் பால் காய்கிறது. பார்வதியம்மாள் சில சீமாட்டிகளைப் போல் காரியம் செய்யக் கையாலாகாதவளில்லை. செய்யவும் தெரியும். செய்து பழக்கமும் உண்டு. ஆகையால் சாதத்தை வடித்துவிட்டு நல்ல முதல்தரமான காப்பியைப்போட்டு முதலில் சாப்பிட்டுவிட்டுப் பிறகு வெளியே தலையைநீட்டினள்.

கோமதியின் துணிச்சலான செய்கையொருபுறம், தன் கணவனும் மகனும் தனது சங்கல்பத்தை மீறிச் சென்ற ஆத்திரம் ஒருபுறமாக இவளைச் சித்திரவதை செய்கிறது. எப்போது அவர்கள் வருவார்கள் என்று காத்திருந்தாள். இரவு 11 மணி சுமாருக்குக் கார் வரும் ஓசை கேட்டதும் ஆத்திரத்துடன் வீதிக்கு ஓடிவந்

தாள். தகப்பனும், மகனும்மட்டும், இறங்கி வருவதைக் கண்டு பத்திரகாளியம்மாள் அவர்களை அப்படியே விழுங்கி விடுபவள்போல் ஒருமுறை முறைத்துப் பார்த்து உதட்டைக் கடித்தாள். வந்தவர்கள் இவளை லக்ஷ்யமே செய்யாது தம்போக்காக காரிலிருந்த ஈரத்துணிகளை மூலையில் போட்டு உள்ளே சென்றார்கள்.

காளிகாதேவிக்கு, தன்னை லக்ஷ்யம் செய்யாதது பின்னும் ஆத்திரத்தைத் தூண்டுவதுபோலாகியதால் பெரிதாக ஒரு கனைப்பு கனைத்துக்கொண்டு விறைத்துப்பார்த்தாள். இவளை முகமெடுத்தும் பார்க்காத விச்வநாதன் தன்னறைக்குப் போகக் கிளம்புவதைக்கண்ட பார்வதியம்மாள், "உம்...வெட்கக்கேட்டிற்கு வரம்பு உண்டா! உங்கள் பகதூர் பட்டம் பிரமாதமாக பிரகாசிக்கும் பொருட்டு ஒரு சமையல்காரக் கழுதையின் பிணந்தூக்கப்போனது வெகு நன்றாயிருக்கிறது. ஊர் சிரிக்கும் காரியத்தைச் செய்ய உங்களுக்குத்தான் மானமில்லை என்றாலும் ஊருக்குக்கூட அஞ்சவில்லை...

என்று கூறி முடிப்பதற்குள் இந்த வார்த்தை விச்வநாதன் மனத்திற்கு தாங்காது பொங்கியதால்...கடுகடுத்த முகத்துடன் "போதும் உன் ப்ரஸங்கம். நீதானே ஊருக்குப் பயந்து முதலில் வழிகாட்டியிருக்கிறாயே.. அது போதாதா! ஊருக்கு பயந்ததனல்தான் தன் வயிற்றுக் குழந்தையைப் பார்க்க வீடேறிவந்த மனுஷியின் மனத்தைப் புண்ணாக்கி அனுப்பி சாகவும் அடித்தாய். இதை ஊர் மிகவும் மெச்சிக் கொண்டாடி உனக்குப் புகழ்மாலையைச் சூட்டி சந்தோஷமலரால் அர்ச்சனை செய்துப் பாராட்டுகிறது பாரு...சீச்சீ! வெட்கங்கெட்டவளே!...என்று ஒரு போடுபோட்டுவிட்டு தன்னறையில் சென்று பேசாமல் படுத்துக்கொண்டார்.

பெத்த தாயின் பிரிவால் கிருபாவதி கதறியதே முரளியின் இதயத்தின் வேலை செய்ததால் அதே துக்கத்தில் அவனும் சாப்பிடவில்லை. பார்வதியம்மாளின் ஆவேசத்தில் இருவரையும் சாப்பிடக் கூப்பிடவும் பிடிக்காது அகங்காரத்துடன் அப்படியும் இப்படியும் உலாவினாள்; பல்லைக்கடித்தாள்.

பின்னும் சற்று நேரத்திற்குப் பிறகு முரளியின் அறை வாசற்படியருகில் சென்று, "ஏண்டா முரளீ! மாமியார் செத்துவிட்ட துக்கம் சோறுகூட வேண்டாமென்கிறதா?" என்று ஒரு கூச்சலிட்டாள். பதிலே இல்லை. கணவனிடம் பக்கம் வந்து, "பிணந்தூக்கிய அலுப்பு சோறுகூட வேண்டாது தூக்கம் வருகிறதாக்கும். நான் போனவள் அப்படியே செத்துவிடுவேன் என்று எண்ணி இப்படிச் செய்தீர்களா?"...என்றாள்.

**விச்**—ஐயோ! அப்பேர்ப்பட்ட நல்ல செய்தி என் காதில் விழுந்திருந்தால் என் குடும்பம் சீர்பட்டு ப்ரகாசிக்குமே! என்னுயுளில் இத்தகைய சந்தோஷங்கூட உண்டாகப் போகிறதா...உம்...சனியனே...போய் முதலில் சாவு தீட்டு முழுகு...பிறகு வீட்டில் உலாவலாம். நாளைக் காலையிலேயே நீ கட்டாயம் அங்கு போய் கிருபாவதியைப் பார்த்து உபசாரம் கூறிவிட்டு வந்தால்தான் நான் இந்த வீட்டில் தண்ணீர் குடிப்பேன். இல்லையேல் என்ன நடக்குமென்று எனக்கே தெரியாது. பத்திரம்—என்று பெரியதொரு உத்திரவைப் போட்டார்.

பார்வதியம்மாளின் ஆக்ரோஷம் எல்லையே கடந்தது. "நான் பெண்பிறந்த சவரணைக்கு என்னை எமன்கூட எடுக்கமாட்டேன் என்கிறானே...ஐயையோ! என் சாவையா கோரித்தபம் செய்கிறீர்கள்? நான் என்று செத்தேன் என்கிற நல்ல சமாச்சாரம் வருமா என்று காத்திருக்கிறீர்கள். இதோ...இப்பவே உங்கள் கண்முன்னேயே தூக்கு போட்டுக்கொண்டு என் ப்ராணனை விடுகிறேன். நீங்கள் சந்தோஷமாயிருங்கள். அந்த சுபசெய்தியைக் கேட்டுப் பேரானந்தப் படுங்கள்"...என்று கூறிக்கொண்டே ஒரு அறையில் சென்று கதவைத் தடாரென்று தாளிட்டுக்கொண்டாள்.

விச்வநாதனுக் கென்னவோ பயமென்பதே தோன்றாது மனம் உறுதியாகவே இருந்தது. அவள் இதுபோல் செய்துள்ள அட்டகாஸம் கொஞ்சநஞ்ச

மன்று. ஆதலால் அவர் லக்ஷியமே செய்யவில்லை. அப்படி செத்தால் சாகட்டு மென்றுகூடத் தோன்றியது.

ஆனல் அடுத்த விநாடி தன் பகதூர் பட்டங்களின் கௌரவமும் தன் குமாரனின் பிரம்மாண்டமான உத்யோகத்தின் மகிமையும் இந்த பத்திர காளியின் செய்கையால் பங்கப்பட்டுவிட்டால் இந்த அவமானத்தைத் தாங்கமுடியாது போய்விடுமே... உலகத்திற்கு உள் மர்மம் என்ன தெரியும்? வீண் அபவாதத்தைக் கொட்டியளப்பார்களே!'' என்று தோன்றியதால் சற்று தியங்கினர்.

இதற்குள் இந்த ரஸாபாஸங்களைக் கேட்டுக்கொண்டிருந்த முரளிக்கு ஆத்திரம் கட்டுமீறிப் பொங்கியதால் நேரே தாயார் கதவு போட்டிருக்கும் இடத்திற்கு வந்து...''ஐயையோ... ஐயையோ! அப்பா தூக்குப் போட்டுக்கொண்டு தொங்குகிருரே... அநியாயமே!''... என்று கத்தினன்.

உள்ளே போன பார்வதியம்மாள் தூக்குப் போட்டுக்கொண்டா சாகப்போகிருள்... நிம்மதியாகப் படுத்தவாறு பெரிய யோசனையிலாழ்ந்திருக்கையில் இந்த கூக்குரல் கேட்டதும் அலறியடித்துக்கொண்டு ஓடிவந்து...''ஐயோ... இதென்ன அக்ரமம்... அசட்டு மனிதன் இப்படியா செய்துவிட்டார். கத்தாதேடா! போலீஸுக்குத் தெரிந்துவிடப்போகிறது. இப்படியும் ஒரு கோழை மனிதர் செய்வாரா!'' என்று கூவியவாறு விச்வநாதனின் விடுதிக்கு ஓடினள்.

அவர் இவள் வார்த்தையைக் கேட்டு உள்ளம் வெதும்பினர் என்ருலும் தன் மகனின் ஜாலக்கையும் அவள் திமிர்பிடித்த நிலையையும் கண்டு கோபத்திலும் நகைப்பு வந்துவிட்டது. கடகடவென்று முதலில் நகைத்துவிட்டார். பின்பு எதையோ நினைத்தவராய் தடதடவென்று எழுந்து வந்து, ''ஐயோ பார்வதீ! உனக்கு இந்த கதி வரலாமாடீ!'' என்று ஒப்பாரி வைத்து உபசாரம் கூறி அவளைக் கட்டிக்கொண்டு அழுது விக்குவதுபோல் நடிக்கவாரம்பித்துவிட்டார்.

எரிகிற கொள்ளியில் எண்ணெயை ஊற்றுவதுபோல் பார்வதியம்மாளுக்கு ரௌத்திராகாரம் பிறிக்கொண்டுவந்தது. தந்தையும் மகனும் மீண்டும் கடகடவென்று நகைத்துப் பின்...''இதோ பாரு...ஒரே வார்த்தை. இனி இந்த வீட்டில் இம்மாதிரி ரகளை நடக்குமானல் கட்டாயம் என்னை நீ காணவே முடியாது. இது சத்தியம். உன்னைப்போல் உளறிவிட்டு மானங்கெட்டுப் பேசாதிருக்கும் பேமானி என்று என்னை நினைக்காதே. என் வார்த்தை சொன்னல் சொன்னதுதான். உன்னல் குடும்பத்தின் சந்தோஷமும் கௌரவமும் களைத்து, செழித்து ஆனந்தப் பூங்காவனம்போல் இருக்கவேண்டியதுபோக, சதா முள்ளும்கல்லும் நிறைந்த காடாக இருப்பதை என்னல் சகிக்கமுடியாது...ஜாக்கிரதை. பிறகு வருவதை அனுபவித்துக்கொள்ளு'' என்று கூறியவாறு வெளி மெத்தைக்குப் போய்விட்டார்.

ஆகாத்யமும் வீம்புக்கு வீராப்பும் பேசி பத்திரகாளித்தனம் செய்தாலும், இந்த வார்த்தைக்கு மீறி எதிர்மூச்சு விடாது முணுமுணுத்துக்கொண்டே சென்ருள். மறு தினம் காலையிலேயே வேறு சமையல்காரன் வீட்டில் அலங்காரமாக ப்ரவேசித்தான். பார்வதியம்மாள் மகனுக்கோ, கணவனுக்கோ சொல்லாமல் நேராக காரில் கிருபாவதியைப்பார்க்கப்போனள் என்ருல் ஏதோ யுகம் திரும்பிவிட்டதாகத்தான் கூறவேண்டுமல்லவா! விச்வநாதனின் மனங்கூட இச் செய்கையைக் கண்டு கடுகளவு சாந்தியடைந்தது.

## 24

அளவற்ற ஆனந்தத்தைப் பணத்தினல்தான் அடைய முடியும் என்று பலபேர்கள் நினைக்கிருர்கள். ஆனல் மனமொத்த அந்தரங்கமானதும் இதய பூர்வமானதுமான அன்புக்கு நிகர் வேறு எதுவும் ஈடாகாது. தம்பதிகளின் கனிந்த ப்ரேமையின் மதுரத்திற்கு முன்பு பணமென்ன செய்யமுடியும்? லக்ஷக்கணக்காக பணம் நிறைந்து குவிந்திருந்தால்மட்டும் மனமொத்த இன்பத்துடன் கூடிய இல் வாழ்க்கையின் சுவை இல்லையெனில் அந்த பணத்திற்கு என்ன மதிப்பு உண்டு.

அந்த நிலைமையில்தான் நாகராஜனும் கண்ணம்மாளும் அளவளாவி களிப்புக் கடலில் கொந்தளிக்கின்றார்கள்.

உலகத்தில் தம்பதிகளின் மனமொத்த ஆனந்தத்திற்கு இணை வேறு இல்லை என்று அடிக்கடி என் பாட்டி சொல்லும்போது நான் அதன் மகிமை தெரியாது சிரிப்பேன். தாதாவையும் பாட்டியையும் கேலிகூடச் செய்வேன். அந்த அத்புதமான தூய பதத்தின் ஸாரத்தை, நித்யானந்தத்தை, இப்போது நான் அனுபவிக்கும்போதுதான் தெரிகிறது. மனமொத்த தாம்பத்ய அன்பின் மகிமையே மகிமைதான். அதன் மணமே வேறுதான்'' என்று கண்ணம்மாள் தன் கணவனின் தோள்களைப் பிடித்துக்கொண்டே கூறினாள்.

பொங்கிவரும் ஆனந்த உணர்ச்சியுடன் நாகராஜன் கண்ணம்மாளைச் சேர்த்துக்கட்டி முத்தமிட்டவாறு "ப்ரியே...நானும் இப்போதுதான் அந்த துல்லியமான ப்ரேமையின் இன்பத்தை அனுபவித்துப் பூரிக்கிறேன். உன் பவித்திரமான இதயத்தின் சாயல் எங்கும் ஆனந்தப் பூங்காவனம்போல் இன்பமளிக்கின்றது. உனது ப்ரேமையின் பரிசுத்தம் என்னைப் பரவசமூட்டுகிறது. பகவான் இந்த பேரானந்தத்தை நமக்களித்தபடியே அவன் கருணையையும் பரிபூரணமாக நம்மீது கடாக்ஷித்துக் காக்கவேண்டுகிறேன். இதைத் தவிர வேறு என்ன இருக்கிறது? அவன் அருள்மாரியன்றோ நமக்கெல்லாம் பெரும்வானிதியம் போன்றது. அது கிடக்கட்டும். நீ எப்போது ஒரு தாயாகப்போகிறாய்? அப்பா ஒவ்வொரு கடிதத்திலும் இதையே எழுதி என்னைத் தொந்தரவு செய்கிறாரே... இதோ பாரு. அம்மாவின் கடிதத்தை, உன்னை ஒரு மாதம் ஊருக்கனுப்பச்சொல்லியிருக்கிறாள். ஏதோ விருதமாம். நோன்பாம். சஷ்டி விருதமாம். சங்குப்பாலாம்... நீ அனுஷ்டிக்கவேண்டும்மாம்... என்ன பதில் எழுதுவது?...

கண்ணம்மா கடகடவென்று சிரித்தபடியே, "சரிதான். இப்படியும் எழுதிவிட்டார்களா! அவர்களுக்கு எவ்விதமான ச்ரமமும் கொடுக்க பகவான் பிரியப்படவில்லை என்றும், இன்னும் 8 மாதத்தில் உங்களைப் பாட்டியும் தாதாவும் ஆக்கிவிடுவார் என்றும் எழுதுங்கள்... என்றாள்.

கட்டுமீறிய களிப்புடன்..."என்ன...கண்ணம்மா!...நிஜமாகவா...என்னிடம் சொல்லவேயில்லையே!"...என்று பூரித்தான். குழந்தைப் பேறு வேண்டாமென்று யாருக்குத்தான் தோன்றும்? மக்கட் பேறு பெறுதாரும் ஒரு மனிதராவார்களா... நாகராஜன் உள்ளம் சந்தோஷமயமாய் பொங்கியது. அவனும் ஒரு தகப்பனாராகப்போகும் விஷயமறிந்ததும் அவனையறியாது ஒரு புத்துணர்ச்சி இதயத்தில் தேங்கியது. அந்த ஆனந்த உணர்ச்சியில் சில விநாடிகள் தம்பதிகளுக்கிடையே மவுனம்குடிகொண்டது. சற்று நிதானித்து "கண்ணம்மா! முரளியின் ஆனந்தமும் இப்படித்தானே இருக்கும்!" என்றான்.

**கண்ண:**—கேட்கவேண்டுமா! கிருபாவதிக்கு மட்டும் சற்று விசனமாகத் தானிருக்கும். என்னதான் சந்தோஷ சாகரத்தில் மிதந்தாலும் தன் பெற்ற தாயாரையும், தன்னை ஆதரித்த மாமாவையும் அடியோடு துறப்பதென்றால் மனம் வருமா! தன் குழந்தையைத் தன் தாயார் எடுத்துக் குலாவாது விரோதி போலிருப்பது சகிக்குமா!

**நாக:**—வாஸ்தவந்தான். கிருபாவதியைப்போல் பொறுமையும் உத்தம குணமும் யாருக்கும் வராது. ஐயோ பாவம்! நானே முன் நின்று அந்த சாந்த ஸ்வரூபியை பிரம்ம ராக்ஷஸியின் கையில் சேர்த்தார்ப்போலாயிற்று. இத்தனை மோசமான மனுஷி என்று நான் நினைக்கவேயில்லை. இந்தமாதிரி பண்ணை மனுஷியை உலகில் பார்க்கவேமுடியாது. தரித்திர மூதேவி!—என்று திட்டும் சமயம் தபால்காரன் ஒரு கவரைக்கொண்டு கொடுத்தான். அதன் கையெழுத்தைப் பார்த்தவுடனே "கண்ணம்மா! முரளியின் கையெழுத்தல்லவா இது... ஆம்...என்ன எழுதியிருக்கிறானே!" என்று ஆவலுடன் கடிதத்தைப்பிரித்தான்.

"அன்புமிக்க நாகராஜனுக்கு ஆசிர்வாதம், உபயக்ஷேமங்கள்.

உன்னிடம் ஒரு முக்யமான காரியத்தை, உதவியை வேண்டி நான் இக்கடிதத்தை எழுதுகிறேன். கிருபாவதியின் தாயார் இறந்துவிட்ட செய்தி ஒருகால் உனக்குத் தெரிந்திருக்கலாம். அதனால் அவள் மிகவும் வருத்த முற்றுத் தவிக்கிருள். இச்சமயம் நீ பெரிய மனது செய்து கண்ணம்மாவை கிருபாவதியிடம் அனுப்பி சற்று ஆறுதலளிக்கும்படிக்குச் செய்தால் மிகவும் உதவியாயிருக்கும். ஆகையால் உடனே அவளை அழைத்துப்போய், விட்டு வந்து எனக்கு எழுது. என் தாயாரின் அசட்டுத்தனத்தை இச்சமயம் பொருட்படுத்தாதே. கிருபாவதி அவள் மாமா வீட்டிலிருக்கிருள். அவள் இங்கு வருமளவும் கண்ணம்மாவைக்கூட இருக்கச் சொல்லு. இந்த விஷயம் என் தாயாருக்குத் தெரியவேண்டாம்.

இங்ஙனம்,
உன் ஆப்தன்,
**முரளி.**"

என்றதை படிக்கும்போதே கண்ணம்மாளுக்கும் நாகராஜனுக்கும் கிருபாவதியின் நிலைமையை எண்ணிக் கண்ணீர் முட்டியது. "உம்...ஐயோ பாவம். கிருபாவதிக்குத் தாய் இறந்தாள் என்ருல் ஒரு வகையில் சந்தோஷமாகத் தானிருக்கும். தாயாரின் கஷ்டம் நீங்கி இம்மட்டுமாவதுபோனதே என்று தோன்றும்; எனினும் பெற்ற தாயாரின் பிரிவைச் சகிப்பது கஷ்டந்தானே! அவளுக்கு இனி ஆப்தமானவர்கள் யாரிருக்கிருர்கள்? இனியாவது இந்தப் பணப்பிசாசு 'சமையல்காரியின் மகள். சமையல்காரியின் மகள்' என்று பிதற்றுவதை விடுமா...ஏன் கண்ணம்மா! இதற்கு என்ன பதில் எழுதுவது?" என்ருன்.

கண்ணம்மாள் கிருபாவதியிடம் அத்யந்த ப்ரேமையும் அனுதாபமும் கொண்டவளாதலால் கண்ணீரை தாரைதாரையாகப் பெருகவிட்டவாறு, "என்ன எழுதுவதாவது? புறப்பட்டுவிட்டேன் என்று எழுதி இன்றே என்னைக் கொண்டு விட்டுவிட்டு நீங்கள் ஓட்டலில் ஏற்பாடு செய்துகொள்ளுங்கள். கிளம்புங்கள். நாம் குழந்தையையும் நேரில் பார்க்கலாம்" என்று பிரயாணத்திற்குச் சித்தமாகி அன்றே மாலை வண்டியில் ரயிலேறினுர்கள். கண்ணம்மாவின் ஆவலுக்குமேல் போட்டிபோடுவதுபோல் ரயிலும் வேகமாக ஓடுகிறது.

## 25

"அதோ பாருங்கள்...மாமா!...எங்க காருடைய ஹாரன் போலிருக்கிறதே... அவர்தான் ஒருவேளை வருகிருரோ!" என்று கிருபாவதி மிகவும் பயந்து நடுங்கியவாறு கூறி உள்ளேயே பதுங்கினுள். கார் இவர்கள் வீட்டுவாசலிலேயே வந்து நின்றது.

அந்த ஓசையைக் கேட்டதே கிருபாவதியின் வயிற்றைக் கலக்கியது. இரவெல்லாம் அழுது அழுது முகம் வீங்கி கண்கள் சிவந்து நடுங்கிப்போய் தலையும் வேஷமுமாக இருந்த கிருபாவதி காரில் யார் வந்திருக்கிருர்கள் என்று நடுங்கியவாறு நடைப்பக்கத்திலிருந்து எட்டிப்பார்த்தாள்.

காளிகாதேவி ப்ரஸன்னமாக விருப்பதைப் பார்த்ததும் தலைமீது பெரிய எரிமலையே புரண்டுவந்து விழுந்ததுபோன்ற அதிர்ச்சி உண்டாகி தேகமாத்யந்தமும் நடுக்கலும் குபீரென்று எரிச்சலும் கிளம்பியது, துவண்டுபோய் நடக்க மாட்டாது உள்ளேவந்து தபாரென்று உட்கார்ந்தாள். இதற்குள் குழந்தை அழும் குரல் கேட்டது. அதேசமயம் பார்வதியம்மாள் இறங்கி உள்ளேவந்தாள்.

வரும்போதே குழந்தையின் அழகுரல் கேட்டதால், "நான் நினைத்தபடிதான் ஆகிறது. அம்மா செத்த துக்கத்தில் குழந்தையைக் கொலைநான் செய்துவிடுவாள்போலிருக்கிறது. என் கண்மணி எங்கே அழுகிறது?" என்று கேட்டவாறு கூடத்திற்கு வந்தாள். கிருபாவதி தலைவிரிகோலமாக விழுந்து கிடப்பதைக் கண்டு ஒருமாதிரியாய் உதட்டைப் பிதுக்கிக்கொண்டு "ஏண்டியம்மா! கிருபாவதீ! இதென்ன அழுகை. இதென்ன வேஷம். குழந்தை அழுது அழுது செத்து விடும்போலிருக்கிறதே...எழுந்திருடீ...அந்த காலத்தில் எங்கம்மா செத்தபோது

அறுபது வயதுகூட ஆகவில்லை. பெரிய உத்யோகஸ்தன் மனைவியாயும், லக்ஷ ரூபாயிக்குமேல் சொத்துக்கு அதிகாரி யாயுமிருந்தாள்...அவள் உதடு அசைந்தால் ஊரே அசையும். நாக்கசைந்தால் நாடே அசையும். அத்தகைய செல்வச் சீமாட்டி இறந்தபொழுதே இத்தகைய ஆகாத்யம் நான் செய்யவில்லை. என் முரளியை அழவிடவில்லை. ஏதோ! பூபார மாக இருந்த கட்டை போனால் சுகப்பட்டதாயிற்று. இதற்கென்ன இத்தனை அமர்க்களம்? குழந்தை அழுது அழுது விரைத்துப்போனால் எப்படி?''...என்று கூறுவதைக் கேட்ட அங்குள்ள எல்லோருடைய ஆச்சர்யமும் கரைபுரண்டது.

இத்தகைய இறுமாப்புடன் பேசும் மனுஷியை எல்லோரும் வெறுத்ததோடு ''இவள் மனுஷியா, ப்ரம ராக்ஷஸியா!'' என்று கூட வியந்தார்கள்.

எங்கே தன் மாமியாரை யாராவது ஏதேனும் துடுக்காகப் பேசிவிடுவார் களோ என்கிற பயத்தினால் ஒவ்வொருவருடைய முகத்தையும் பரிதாபமாகப் பார்த்து ஒருவரும் எதிரே நிற்காது உள்ளே போய்விடும்படி ஜாடைகாட்டி உள்ளே அனுப்பினாள். அதற்குள் அழுகிற குழந்தையைப் பார்வதியம்மாளே எடுத்துக்கொண்டு வந்தாள். குழந்தையைக் கொஞ்சிக் குலாவி முத்தமிட்டுப்பின், ''உம்...ஒரு நாளைக்குள்ளேயே குழந்தையைச் சரியாகக் கவனிக்காமல் இப்படி இளைத்துவிட்டதே. இன்னும் இந்த பத்துநாளும் குழந்தை இங்கிருந்தால் அதற் கும் கர்மம் செய்யத்தான் நேரும்...அம்மா! கிருபாவதீ! இந்த காற்றில்லாத குகையில் உட்காரமுடியவே இல்லை. இப்போதே ஜலதோஷம் பிடித்துவிடும் போலிருக்கிறது. நீ காருக்கு வா; காற்றடிக்க அங்கு போவோம்.'' என்று குழந் தையைத் தூக்கிக்கொண்டு முன்னே நடந்து காரில் ஏறி உட்கார்ந்தாள்.

சோகப் பதுமைபோன்ற கிருபாவதி தள்ளாடியவாறு கூடவே சென்றாள். இதற்குள் கிருபாவதியின் மாமி காப்பியுடன் சம்மந்தியம்மாள் எதிரில் வந்து பயந்து நடுங்கியவாறு நின்று, ''இதைச் சாப்பிட்டால்தான் குழந்தைகளுக்கு க்ஷேமம்''...என்று கூறினாள்.

பார்வதியம்மாள் அந்தம்மாளை ஒருமுறை முறைத்துப் பார்த்துவிட்டு டம் ப்ளரை சடக்கென்று வாங்கி காபியை வீதியில் வீசி எறிந்துவிட்டு டம்ப்ளரை அலக்ஷியமாக நீட்டினாள். எத்தனைதான் பொறுமையாக விருப்பினும் இச் செய்கை அந்தம்மாளைத் தாக்கியது, ''தூத்து...ஜென்மத்தைப் பாரு'' என்று கூறிக்கொண்டே போய்விட்டாள். நல்ல வேளையாக அச்சமயம் குழந்தை பல மாக அழுததால் அது இந்த பரதேவதையின் காதில் விழவில்லை. நடுநடுங்கிச் சுருண்டு கோழிபோலுள்ள கிருபாவதி அசல் ஊமையைப்போலவே ஆனாள்.

**பார்வதி:**— அம்மா! கிருபாவதி! ஏதோ உங்கம்மா இந்தமட்டும் கஷ்டப் படாது போனாள். அது கிடக்கட்டும். இப்போது எங்கே பார்த்தாலும் திருடர் பயம் அதிகமாயிருக்கிறதாம். அதிலும் பகல் கொள்ளை கேட்கவே வேண்டாம். உங்கள் வீட்டு ஜனங்களோ மிகவும் ஏழைகள்; பஞ்சத்தில் பறக்கும் காக்காய்கள் மாதிரி இருக்கிறார்கள். காலம் கெட்டுக்கிடக்கிறது. அதனால் நீ இந்த வைர ஸெட்டு நகைகளைக் கழட்டிக் கொடுத்துவிட்டு கெம்பு செட்டு கொண்டுவந்திருக் கிறேன்; இதைப் போட்டுக் கொள்ளு. குழந்தையை நான் எடுத்துக்கொண்டு போகிறேன். நீ இந்த கர்மாதி முடிந்ததும் வந்து சேரு...என்றாள்.

இது கேட்ட கிருபாவதிக்கு ஒரு ஷாக்கடித்தமாதிரி இருந்தது. தேகம் நடுங்க நாக்குழற, ''மாமீ! நானும் உங்களுடன் வந்துவிடுகிறேன்.என்னையும் அழைத்துப் போங்கள்'' என்று கூறும்போது குரல் கம்மியது.

**பார்:**—ஐயோ! வேண்டாமடியம்மா! நான் ஏற்கெனவே பொல்லாத பட்டப் பெயர் எடுத்து வருகிறேன். இப்போது இன்னும் என்னை விடவேமாட் டார்கள். எல்லாம் உங்கள் நன்மைக்குத்தான் பாடுபடுகிறேன். நீ உன் தாயார் காரியத்தை முடித்துவிட்டு மறுநாளே வந்து சேரு. ஒருகால் காரியத்திற்கு உன் மாமனாரும் முரளியுங்கூட வருவார்கள்; அவர்களுடன் வந்துவிடலாம். குழந்தை

அனியாயமாகப் போய்விடும். நான் எடுத்துக்கொண்டுதான் போவேன். முரளி அதற்காகத்தான் என்னை அனுப்பினன். இந்தா கெம்பு தோடு, திருகு...

கிரு:—மாமீ ! மன்னிக்கவேண்டும். நகைகளை இதோ கொடுத்துவிடுகிறேன். குழந்தையைமட்டும் நான் வெகு ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் பயப்படவே வேண்டாம். அது என்னிடமே இருக்கட்டும் மாமி! குழந்தை தாய்ப்பால் இல்லாது ஏங்கிவிடும். அதனால் உடம்பு சரியில்லாது போகலாம்... இந்த விஷயத்தில்மட்டும் தயவு செய்யவேண்டும். பச்சைக் குழந்தைதானே மாமீ!

பார்:—உன் குழந்தையிடத்தில் உன்னைவிட எனக்கு அதிக ஆசையும் அக்கரையும் உண்டுடீயம்மா ! நான் பால்காரி வைத்து உன் குழந்தையை வளர்க்கிறேன். 'குழந்தை அதிகநாள் பால் குடித்தால் உன் உடம்புக்கு ஆகாது. இளைத்துவிடும்; அழகு குறைந்துவிடும்: வேறு பால்காரியைப் பாரு' என்று முரளி தினம் துணப்புகிருன். 'நானும் போகப் போகப் பார்க்கலாம்' என்று பேசாதிருந்தேன். இந்த சந்தர்ப்பத்தை வைத்துதான் பால்காரியிடம் பழக்கவேண்டும். உடனே குழந்தையை எடுத்து வா என்று அவன்தான் என்னையனுப்பினன். இதனல் உனக்கென்ன குறைவு. என்ன கஷ்டம். நீயும் சாவு காரியத்தை நிம்மதியாய் கவனிக்கலாம். சதா அழாதேடியம்மா !

இது கேட்ட கிருபாவதிக்கு துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டது. சரிக்குச் சரியான சம்மந்தம் செய்யாத தோஷம் இத்தகைய பயங்கரமாகவா இருக்கிறது என்பதை நினைக்க நினைக்க அவளால் தாங்கமுடியாத விசனம் பொங்கியது. தன்னருமைக் குழந்தையை எப்படிப் பிரிந்திருப்பது என்று நினைக்கும்போதே ப்ரளயத்தின் மத்தியில் தான் அகப்பட்டுக்கொண்டு தத்தளிப்பதுபோல் ஒரு பயங்கரத் தோற்றம் உண்டாகி வதைக்கிறது.

ஏதோ ஆவேசம் வந்தவளைப்போல் மாமியாரின் காலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "மாமீ !... மாமீ ! இந்த காரியத்தை எப்படியாவது என் மாமா செய்துவிடுவார். நானும் உங்களோடு வருகிறேன். குழந்தையைப் பிரிந்திருக்க என்னல் முடியாது மாமீ! என்னை அழைத்துப்போங்கள். இல்லாவிட்டால் ப்ரேமாவை என்னிடம் விட்டுப் போங்கள். நான் கண்ணேபோல் பார்த்துக் கொள்கிறேன் "... என்று கண்ணீர் பெருகக் கெஞ்சினுள்.

பார்:—இதென்ன ஆகாத்யமடியம்மா ! என் முரளியை இன்னும் சிறு குழந்தையிலேயே எங்க மாமியார் எடுத்துக்கொண்டுபோய் ஒரு வருஷம் தனியாக வைத்திருந்தார். அப்போது எனக்கு எதுவுமே இப்படி சொல்லத் தெரியவில்லை. ஒன்றும் ஆகாத்யம் செய்யாதே. இந்த அடசல் வீட்டில் அநாகரீகக் கூட்டத்து மத்தியில் என் குழந்தை இருந்தால் அதை நல்லபடிக் காணவே முடியாது. நான் உன்னை அழைத்துப்போவதைப்பற்றி ஆக்ஷேபனையே இல்லை. உன் மாமனுரும் கணவனும் திட்டுவார்கள். பெத்த தாயாரின் கர்மாதிக்குக்கூட விடாது வந்தேன் என்று என் மண்டையை உருட்டுவார்கள். இங்குள்ள அல்ப ஜனங்களும் என்னைக் கொலைசெய்துவிடுவார்கள். இன்னும் பத்து நாள் கொட்டைப்பாக்காய் உருண்டுபோய்விடுகிறது. இதற்குள் என்ன குடி முழுகிவிடுகிறது... சரி நீ இறங்கு... ட்ரைவர் !... வண்டியை விடு "... என்ருள்.

என்ன காரணத்தினலோ கிருபாவதிக்கு பூமியும் ஆகாயமும் தீப்பிடித்து எரிவதுபோல் ஒரு உணர்ச்சி உண்டாகி தடுமாறச்செய்தது. மாமியாரிடம் எதிர்த்து அதிகம் பேசவும் தைரியமில்லாது பயம் நடுக்குகிறது. குழந்தையை எடுத்துப் பல முத்தமிட்டு மார்போடு சாத்திக்கொண்டாள். இதற்குள் நேரமாகிவிட்டதால் ட்ரைவர் காரை ஸ்டார்டு பண்ணிவிட்டான்.

பார்வதியம்மாள் குழந்தையைக் கையில் வாங்கிக்கொண்டு, "கிருபாவதீ ! இறங்கிப் போடியம்மா; இந்த நகைகளைப் போட்டுக்கொள்ளவில்லையே!" என்ருள்.

கிரு:—இதுகூட வேண்டாம் மாமீ ! பத்துநாள்தானே... இப்படியே இருந்துவிடுகிறேன். இதைக்கூட யாராவது திருடிக்கொண்டு போய்விட்டால் கஷ்டம். குழந்தை அழாமலிருக்குமா மாமி !...

பார்:—அப்படி அழுதால் கொண்டுவந்து விட்டுவிடுகிறேன். நீ கவலைப்படாதே. நானைக்கூட இந்த காரியம் செய்ய வில்லை. முரளிதான் தொந்தரவு செய்து அனுப்பினன்... உம்...காரைவிடுப்பா— என்ருள். கிருபாவதி கண்ணீர் பெருகியவாறு காரிலிருந்து இறங்கினுள்.

குழந்தை தாயாரின் முகத்தைப்பார்த்து களகளவென்று சிரித்து தன் பாஷையாகிய இக்கும்... இங்கா ... கூ... என்றெல்லாம் மழலையை மொழிந்து தாயிடம் தாவியது. கிருபாவதி மனது தத்தளிக்கும் நிலைமையில் தவிக்கிருள். தன் கணவனே குழந்தையைக் கொண்டுவரச் சொல்லியிருப்பதால் பிடிவாத மாகத் தடுத்தாலும் யாருக்கு என்ன கோபம் வருமோ! அழகு, அழகு என்று அழகுக்கே அடிமையாயுள்ளவர்களாதலால் குழந்தைக்கு போதாத காலத்தினல் ஏதாவது உடம்புக்கு வந்துவிட்டாலும் என் தலையை உருட்டுவார்கள் என்கிற பயமும் கூடவே பாதிப்பதால்...வாய்திறக்க முடியவில்லை. கண்களில் மழை பொழிகிறது. ப்ரேமா... ப்ரேமா...“ப்ரேமா...என்னடா கண்ணு சிரிக்கிறே?”... என்கிருள். வார்த்தை வெளிவராது தொண்டைக்குள்ளேயே சிக்கி உழல்கிறது.

“அம்மா! கிருபாவதி! உள்ளே போடியம்மா! மூக்குத்திருகில்லாது சுமங் கலிகள் இருக்கக்கூடாது. இந்தா! இந்தக் கெம்புதிருகு போட்டுக்கொள்ளு. இதனல் கவுரவம் குறையாது...சாவுக்கு வந்தவர்கள் போய்வருகிறேன் என்று சொல்லக்கூடாது.....ட்ரைவர்.....காரைவிடு”.....என்ருள். கிருபாவதி என்ன பொறுமையாக இருந்தும் அவளால் துக்கம் அடக்கமுடியாது பீறிக்கொண்டு வந்து தேவவாரம்பித்தாள். காரும் பறந்துசென்றது. தன் தாயாருடன் தன்னு யிரும் போய்விடக்கூடாதா! என்றுதான் கிருபாவதிக்குத் தோன்றியதே யன்றி வேறு ஒன்றுமே தோன்றவில்லை. கார் போகும் ஓசையைக்கூட மீறிக்கொண்டு குழந்தை வீற் என்று கத்தும் குரல் கிருபாவதியின் இதயத்தைத் துளைத்தது.

## 26

எப்பேர்ப்பட்ட குரூபிகளுக்கும் உயர்ந்த ஆடையாபரணங்களால் அலங்கரித் தால் சற்று அழகு உண்டாவது கண்கூடான ப்ரத்யக்ஷம். இயற்கையிலேயே நல்ல அழகுள்ளவர்களுக்கு அலங்காரமும் சேர்ந்தால் அழகுக்குக் கேட்க வேண்டுமா! கிருபாவதியின் இயற்கையழகும் செயற்கையழகும் சேர்ந்து அவளை தேவகன்னிகையோ, என்று ப்ரமிக்கச் செய்தது.

மங்கையர்களுக்கு முக்யமான மாங்கல்யத்தைத் தவிர மற்றவைகளைக் கழற்றிக்கொண்டும் கையிலிருந்த குழந்தையையும் பிடுங்கிக்கொண்டும் பார்வதி யம்மாள் தான் வந்த காரியத்தை வெற்றிகரமாய் முடித்துவிட்டதாக பெருமித மான சந்தோஷத்தோடு சென்றுவிட்டாள்.

கிருபாவதியோ, தனது நகைகளைப்பற்றி உண்மையில் ஒரு பளுவு நீங்கிய தாகவே எண்ணினுள். ஆனல் தன் கையிலிருந்து குழந்தையைப் பிடுங்கிக் கொண்டுபோனதுமட்டும் அவளால் பொறுக்கவே முடியாதுபோயிற்று. தன்னை யறியாமலேயே புலம்பிக்கொண்டே உள்ளே வந்தாள்.

பெரிய பணக்காரியாயும் கர்வம்பிடித்த பிசாசாயுமிருந்ததால் அருகில் வருவதற்கு ஆண்கள்முதல் பயந்தார்கள். காரில் குழந்தையை எடுத்துக் கொண்டு போனதன் தகவல் தெரியாது குழம்புகையில், கிருபாவதி தாங்கமாட் டாத துக்கத்துடன் விம்மிக்கொண்டே வருவதைக் கண்டு அவளுடைய மாமா திடுக்கிட்டவராய், “என்னம்மா சமாச்சாரம்... கிருபாவதி...குழந்தையை எங்கு கொண்டுபோகிருள்? ஏன் இப்படிக் கதறுகிருய்?” என்று மிக்க அங்கலாய்ப் புடன் கேட்டார்.

சில நிமிடங்கள்வரையில் கிருபாவதி பேசமாட்டாது விம்மினுள். பிறகு சற்று சமாளித்துக்கொண்டு, “ஒன்றுமில்லை மாமா! சரிக்குச் சரியான சம்மந்த மில்லாததன் கேடு எத்தனைவித விபரீதங்களைச் செய்யும் என்று பகவான் காட்டு கிருர். அவர்கள் சொத்து; அவர்கள் கொண்டுபோகிருர்கள். நான் அச் சிசுவைப்

பத்துமாதம் சுமக்கும் கூலிக்காரிதானே... என்று கூறும்போது சோகம் உச்சத்தை எட்டி தேகத்தையே ஒரு ஆட்டு ஆட்டியது. அதோடு வாய் திறக்கமுடியாது திணறியது.

இதைக்கேட்ட சதாசிவத்தின் உள்ளம் பற்றி எரிந்தது... "கிருபாவதி! நானே உன்னை வேண்டுமென்று படுகுழியில் தள்ளியதுபோலாகிவிட்டது. என் தம்பியின் மகனுக்கு உன்னைக் கொடுத்திருந்தால் நீ எவ்வளவு சந்தோஷமாயிருப்பாய்! பணத்தைமட்டும் நான் பார்க்கவில்லை. உன் மதுரகீதத்தை விருத்தி செய்து பெருமைப்படுத்துவான் என்ற ஆசைக்காக நான் என் சொந்த மனிதனைக் கூட வஞ்சனை செய்தேன். அவன் மிகவும் முரடனாயிற்றே! கலாரஸனையற்ற ஞான சூனியனாயிற்றே. சங்கீதமென்றால் மிகவும் வெறுக்கக்கூடியவனாயிற்றே... என்றெல்லாம் யோசித்து இந்த காரியம் செய்துவிட்டேன். இப்படியா உன்னை நம்பாமல் உன் நகைகளையும் பிடுங்கிக்கொண்டு குழந்தையையும் கொண்டு போவார்கள். இந்தக் கொடுமையை எந்த தெய்வந்தான் சகிக்கும்?" என்று கண்ணீர் விட்டார்.

**கிரு:**—மாமா! அம்மாவின் காரியத்தை நீங்கள் எப்படியாவது செய்து முடித்துவிடுங்கள். என்னால் குழந்தையைவிட்டு இருக்கமுடியவேமுடியாது போலிருக்கிறது. ஆதலால் என்னை நீங்கள் தயவுசெய்து கொண்டு விட்டுவிடுங்கள். இங்கு நான் இருந்து என்ன காரியம் செய்யப்போகிறேன். அம்மா என்னவோ பட்ட கஷ்டங்கள் நீங்கி சாந்தியும் சந்துஷ்டியும் அடைந்துவிட்டாள். வீணை நான் எதற்கு மனஸ்தாபத்துடனும் சந்தேகத்துடனும் இருக்கவேண்டும். இனிமேல் வருவார் போவாருக்கெல்லாம் இதொரு வேடிக்கையாயும் வம்பாயும் முடியும். அதைவிட மீண்டும் வருவேன் என்கிற வார்த்தையுடன் நான் போகிறேன் மாமா! இன்றே போகலாமா!

**சதா:**—இன்று சுட்ட சரிநாள் போகக்கூடாதென்பார்கள். மகா பாவி குழந்தையைப் பிரித்துக்கொண்டு போய்விட்டாள். இன்று பொறுத்துக் கொண்டிரு. உன் விருப்பப்படியே நாளையே அழைத்துப்போகிறேன்" என்றார்.

183080
சென்னை-600 0..

கிருபாவதியின் பறிகொடுத்த நெஞ்சத்தின் தவிப்பைச் சொல்லவேமுடியாது. எத்தனை தேற்றியும் அவள் மனது சமாதானமடையாது குழந்தை என்ன செய்கிறதோ! அழுகிறதோ, பாலுக்குத் தவிக்கிறதோ, அழுது அழுது ஏங்கி விடுமோ! தேக அசௌக்யம் உண்டாகிவிடுமோ!" என்றெல்லாம் எண்ணி தத்தளிக்கின்றது. தண்ணீர்கூடப் பிடிக்கவில்லை...

அவ்வாறு புலம்பும்போதுதான் முன்பு தெரிவித்த பள்ளிக்கூட உபாத்தியாயினி வந்தாள். கிருபாவதியின் பரிதாபத்தைக் கண்டு கண்ணீர்விட்டுக் கதறினாள். கிருபாவதியைத் தொட்டுப் பார்த்துத் திடுக்கிட்டாள். "ஐயோ! ஜுரம் நெருப்பாய் காய்கிறதே! ஏம்மா இப்படி திடீரென்று ஜுரம் வந்தது? ஒருகால் பால் கட்டிக்கொண்டு ஜுரம் வந்திருக்குமோ!" என்று எல்லோரும் சந்தேகப்பட்டார்கள். வெகு ஆவலுடன் தன்னைப் பார்க்க வந்த உபாத்தியாயினியைக் கண்டதும் கிருபாவதிக்கு எங்குமில்லாத துக்கம் பீறிக்கொண்டு வந்ததால் கதறினாள்.

இந்த சமயம் அவளிடம் அதிகம் வார்த்தை கொடுக்கக்கூடாதென்கிற எண்ணத்துடன் உபாத்தியாயினி போய்விட்டாள். எப்படியும் மறுதினம் காலையிலேயே ஊருக்குப் போய்விடவேண்டுமென்று கிருபாவதி வெகு ஆவலுடன் பறந்துகொண்டிருந்ததற்கு அவளைப் பின்னும் சோதிப்பதுபோல் ப்ரமாதமான ஜுரம் வந்ததானது அவளது சப்த நாடியும் ஒடுங்கியதுபோலாயிற்று. 'கொஞ்சம் ஜுரம் குறைந்ததும் கொண்டுவிடுகிறேன்' என்று மாமா சமாதானமாக கூறினார்.

உடம்பு தெரியாத ஜுரத்துடன் படுத்திருக்கையில் நாகராஜனும் அவன் மனைவியும் வந்தார்கள். க்ருபாவதியின் அலங்கோலத்தையும், நடந்துள்ள விஷயத்தையும் அறிந்து பதறினார்கள். நாகராஜனுக்கு முரளியின் செய்கை மிகவும் கேவலமாகத் தோன்றியது. "எனக்கு இத்தனை உருக்கமாயும் வியக்கும்

வண்ணமும் கடிதம் எழுதியவன் குழந்தையை எடுத்துவரும் படியாக ஏன் எழுதவேண்டும்?'' என்று வியந்தான்.

கிருபாவதியின் நிலைமையைப்பார்த்தால் பயமாகவும் இருந்தது. "எனக்கு உடம்பு எப்படியிருந்தாலும் இருக்கட்டும். என்னை எப்படியாவது என் ப்ரேமா விடம் சேர்த்துவிடுங்கள். நான் இப்போதே கிளம்புகிறேன். கண்ணம்மா! நீ அவரிடம் சிபார்சு பண்ணு...என்னுடைய பொறுமையை இனி சோதிக்காதே... என் ப்ரேமா...என் கணவர்''...என்று அவன் வாய்ப்பிதற்றவாரம்பித்தாள்.

எத்தனை சமாதானம் செய்தும் கேட்காது பிதற்றுவதைக் கண்ட நாகராஜ னுக்கு மனது உருகுகிறது. பரிதாபத்துடன் கிருபாவதியருகில் தானே போய் "அம்மணீ! இந்த நிலைமையில் வண்டியில் போகவே முடியாதம்மா! நான் முரளிக்குக் கடிதமெழுதி ப்ரேமாவை எடுத்துக்கொண்டு உடனே வரும்படிச் செய்கிறேன்; வருத்தப்படாதீர்கள். இதோ, இப்போதே எழுதுகிறேன்.'' என்று சமாதானம் செய்துப் பின் உடனே கடிதம் எழுதினன். கிருபாவதிக்கு எத் தனையோ உதவி பண்ணவேண்டுமென்று வந்தும் இப்படியாகிவிட்டதே என்கிற துக்கந்தான் நாகராஜனுக்கு அதிகமாகியது.

## 27

முரளியும் அவனுடைய தகப்பனரும் போஜனம் செய்துவிட்டுத் தம்தம் அறைக்குள் உட்கார்ந்திருக்கையில் தங்கள் மோட்டார் ஹாரன் கேட்டதும் பத்திரகாளியம்மாள் திரும்பி வந்துவிட்டாள் என்பதை அறிந்துகொண்டார்கள். ஒருவரும் எழுந்துவந்து பார்க்க ப்ரியப்படவில்லை.

ஆனல் அடுத்த நிமிஷமே குழந்தை ப்ரமாதமாக அழும் குரலைக் கேட்டதும் இருவரும் விஷயமறியாது திடுக்கிட்டு "என்ன! ப்ரேமாவின் குரல்போலிருக் கிறதே. கிருபாவதியை மூர்க்கத்தனமாக அழைத்துவந்துவிட்டாளா என்ன?'' என்ற சந்தேகத்துடன் வெளியில் எட்டிப்பார்த்தார்கள்.

அழுது அழுது கேவியும் களைத்தும் துவண்டுபோய் வேர்த்து விருவிருத் துள்ள குழந்தையைத் தூக்கிக்கொண்டு பார்வதியம்மாள் சமாதானம் செய்த படி வருவதையும் க்ருபாவதி வராததையும் கண்டு திடுக்கிட்டார்கள். ஒரே சமயத்தில் இருவரும் பார்வதியருகில் வந்து "இதென்ன காரியம்?'' என்று சற்று கடினமான குரலில் கேட்டார்கள்.

குழந்தையின் கதறலைச் சகிக்கவேமுடியவில்லை. முரளி விரைக்கவிரைக்கத் தாயாரைப் பார்த்து, "ப்ரேமா...கண்ணு! இதோ பாரு...ராஜா!''...என்று கொஞ்சியபடியே குழந்தையைக் கையில் வாங்கிக்கொண்டான். குழந்தையோ ஒரே மூச்சாக விறைத்துவிடும்போல் கத்துகிறதேயன்றி இவன் முகத்தைக் கூடப் பார்க்கவில்லை.

**விசுவநாதன்:**—கிருபாவதி எங்கே? குழந்தையைமட்டும் ஏன் கொண்டு வந்தாய்?

**முர:**—அம்மாவின் காரியமே எடாகூடந்தானே...அழ அழக் குழந்தையை எதற்காகத் தூக்கிக்கொண்டு வரவேண்டும்?'' என்று சிள்ளென்று கூறினன்.

இதைக்கேட்ட பார்வதியம்மாள், "என் தலையெழுத்து, எதற்கும் நான் தான் அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறேன். உங்க கிருபாவதியேதான் எடுத்துக் கொண்டு போகும்படிக்கட்டாயம் செய்தாள். அந்த சமையற்காரப்பிணம் செத்த தால் காடெல்லாம் எலும்பாகிவிட்டதுபோல் தினம் மூன்றுகாலமும் எல்லோரும் கூடிப் பிலாக்கணம் பாடி சந்தை வைத்து அழுகிறார்களாம். அதைப் பார்த்து குழந்தை பயப்பட்டுக்கொண்டு கத்துகிறதாம். அதோடு நாட்டுப்புறத்து அல்ப ஜனங்கள் கண்ணைப் போட்டு த்ருஷ்டிபடச் செய்வார்களாம். எல்லோரும் குழந் தையின் சமத்தையும் அழகையுங் கண்டு, எடுத்து எடுத்துக் கசக்கிப் பிழிந்து உடம்புக்கு வரச்செய்துவிடுவார்களாம். கொடுக்கமாட்டேன் என்பதற்கு தாக்ஷண்யமாயிருக்குமாம். யாரிடம் இங்கு அனுப்பலாம் என்று தவித்துக்கொண் டிருந்தாளாம். என்னைப் பார்த்தவுடனே பரமசந்தோஷமாயிற்றாம்; கொடுத்தனுப்

பினள். நானும் வேண்டாமென்று எத்தனையோ சொன்னேன். பிறகு அவள் சொல்வதையெல்லாம் கவனித்துப் பார்த்ததில் அதுவும் நிரம்பவும் சரி என்று தான் தோன்றியது. குழந்தையின் க்ஷேமத்தில் நமக்கில்லாத அக்கரை யாருக்கு உண்டு ? ஏதோ பகவான் கடுகத்தனை கொடுத்திருக்கிறார். அது நன்றாயிருக் கட்டும் என்று நான் எடுத்துவந்தேன். என்று ஒரே சாதனையாகப் போடுபோட்டு விட்டு, "டேய் சுப்பா ! உன் மனைவியை அழைத்து வாடா ! குழந்தைக்குப் பால் கொடுக்கவேண்டும்" என்று ஒரு உத்திரவும் போட்டாள்.

நகை விஷயத்தைப்பற்றி ஏதுமே கூறாது ஒளித்துவிட்டாள். சுப்பனுடைய மனைவி பார்ப்பதற்கே விகார ஸ்வரூபமாயும் பரட்டைத்தலையும் பூத உடலும் பைசாசத்தின் குரலைப் பழிக்கும் குரலும் முண்டைக்கண்ணுமாக இருப்பாள். பர்வதாகாரமாய் பூதனையின் வடிவுடன் வரும் சுப்பியைக் கண்டவுடனே குழந்தை அலறி அலறி அழவாரம்பித்ததேயன்றி அவள் முகத்தைக்கூடப் பார்க்கவில்லை.

சுப்பியும் தனது இனிமையான பீரங்கித் தொண்டையில் "வாடா என் ராசாத்தீ ! மொடுக்கு மொடுக்குன்னு பாலைக்குடிச்சுப்புடுடா கண்ணு ! இந்தாடா செல்லம்... அடி எம்மவளே... ஏன் இம்பிட்டுக்கத்தறே... இப்பிடி வா !" என்று கூறியவாறு, குழந்தையைப் பலவந்தமாக வாங்கினாள்.

குழந்தை பின்னும் பிரமாதமாக அழுதுகொண்டே பாட்டியிடம் ஒட்டிக் கொண்டது. முரளிக்கோ, குழந்தை அழ அழ கோபம் கொதித்தெழுகிறது. தாயார் செய்த சதி தெரியாது குழம்பித் தவிக்கிறான். இதே நிலையில் அழுது எங்கே குழந்தை செத்துவிடுமோ என்றுகூடத் தோன்றியது. குழந்தை வளர்ப்பதென் றால் சாமான்யமா ! அதிலும் தாயாரிடம் ஆனந்தமாக இருந்த குழந்தையைப் பிடுங்கிக்கொண்டு வந்து வளர்ப்பதென்றால் எத்தகைய கஷ்டம். தாயார் இறந்த குழந்தைகள் வளரவில்லையா என்று பார்வதி நினைக்கலாம். தாயாரை இழக் கும்போதே பகவான் அந்தக் குழந்தைக்கு எப்படியோ சாந்தத்தையும் சகிப்புத் தன்மையையும் கொடுத்துவிடுகிறான். அங்ஙனமிருக்கும்போதே சில குழந்தை களை வளர்க்க, படாத பாடு படுகிறார்கள்.

அப்படிக்கிருக்க பணத்திமிரும் அழகு அகந்தையும் கொண்டு வேண்டு மென்று தானாக சங்கடத்தை விலைக்கு வாங்கிவந்த பார்வதியம்மாளின் நெஞ் சழுத்தத்தை யாரால் கூறமுடியும்? தனக்குத் தெரிந்த பல குழந்தைக்காரிகளைக் கூப்பிட்டுப் பால் கொடுக்கச்செய்து பார்த்தாள்.

சில குழந்தைகள்தான் கண்டவர்களிடமும் பால் குடிக்கும், சில குழந் தைகள் தாதிப் பால் என்றால் கிட்ட நெருங்கவே நெருங்காது. அதே போல் ப்ரேமா ஒருவரிடமும் வாய்வைக்கவே மறுத்து அழுது அழுது களைத்துத் தூங்கு வதும் மீண்டும் வெறிபிடித்தழுவதும் போட்டுப் பாலுடன் சற்று சமாளிப்பது மாக அன்று பூராவும் பார்வதியம்மாளுக்கே ஏன் எடுத்துக்கொண்டு வந்தோம் என்றுகூடத்தோன்றி மெல்ல சமாளிக்கப்பட்ட பாடுபோதும் போதுமென்றாயது.

இரவு முற்றும் குழந்தை கத்தியதைக்கேட்ட முரளிக்கு க்ருபாவதியின் மீதுதான் அடங்காத கோபம் உண்டாகியது. "இந்த குழந்தையைக்கூட கவனிக் காது என்ன கர்மாந்திரம் வேண்டியிருக்கிறது? தானும் கூடவந்து தொலையாமல் குழந்தையை அனுப்பிவிட்டு அங்கு எந்தப் பீடைகளுடன் கூத்தடிக்கவேண்டும்? பொழுது விடிந்ததும் முதல் காரியம் குழந்தையைக் கொண்டுவரவேண்டும். இல்லையேல் அவளையே இழுத்துக்கொண்டு வரவேண்டும்!" என்று தீர்மானித்து மறுதினம் காலையில் எழுந்ததும் "அம்மா ! குழந்தையை இப்படிக்கொடு. நான் அவளிடம் கொண்டு விட்டுவிட்டு வருகிறேன். இன்னும் இரண்டு நாட்கள் இருந்தால் குழந்தை நிச்சயமாய் இறந்துவிடும். கொண்டுவா இப்படி" என்றான்.

இப்படிக் கேட்பான் என்று அவள் நினைக்கவேயில்லையாதலால் அவளுக் குத் தூக்கிவாரிப்போட்டது. "என்னடா ஆகாத்யம் செய்கிறாய்! இன்று சரியாகி விடும். இன்னும் இப்படியே அழுதால் நாளைக்குப் பார்க்கலாம். எனக்குமட்டும்

குழந்தையின் அருமை கிடையாதா என்ன? உன்னைவிட நான் அதிக ஆசையுடன் இருக்கிறேன். உன் வேலையைப் பாரு...அதோ யாரோ காரில் உன்னைத் தேடிக்கொண்டுவருகிருர்கள். போய்ப் பாரு" என்ருள்.

அப்போதும் குழந்தை அழுகிறதேயன்றி சமாதானமடையவில்லை. முரளியை ஆபீஸ் விஷயமாகத் தேடிக்கொண்டு யாரோ பெரிய மனிதர்கள் வந்திருப்பதால் அவன் போய்விட்டான். அவனுக்கு மனது நிம்மதி கொள்ளாததால் சரியாகப் பேசவும்முடியாதுபோயிற்று. அன்றய தபாலில் நாகராஜன் எழுதிய கடிதம் வந்தது. கையெழுத்தைப் பார்த்தவுடனே தெரிந்துகொண்ட முரளி ஆவலுடன் படிக்க வாரம்பித்தான்.

"அன்புமிக்க முரளிக்கு.

வெகு காரியமாக கண்ணம்மாவைக் கொண்டுவிடச் சொல்லி பரிசலுடன் கடிதம் எழுதிவிட்டு உன் தாயாரை யனுப்பி கிருபாவதியின் இதயம் துடிக்க கைக்குழந்தையைத் தூக்கிக்கொண்டு வரச்செய்ததானது எனக்குச் சற்றும் பிடிக்கவே இல்லை. முரளியா இப்படிச் செய்வான் என்று கூடச் சந்தேகிக்கிறேன். பெத்த தாயாருக்குத் தன் குழந்தையின்மீது இல்லாத பாசமா உனக்கு வந்துவிட்டது. இத்தனை கடுபிடி செய்து மிரட்டியா குழந்தையைப் பிடுங்கிவரச் செய்வது. கிருபாவதியிடம் குழந்தை விஷயத்திலும் நம்பிக்கை இல்லை? நகை விஷயத்திலுமா நம்பிக்கை இல்லை? உரித்த வாழைப்பழம்போல் வைத்துவிட்டு இச்சமயம் இப்படி நகைகளை உரிஞ்சிக்கொண்டு வரும்படியாகச் செய்ய உன்மனமெப்படித் துணிந்தது!

இந்த பரிபவத்தின் காரணமும் குழந்தையின் பிரிவின் பரிதாபமும் ஒன்றுகூடி கிருபாவதிக்கு நினைவு தெரியாத ஜுரம் வந்துவிட்டது. குழந்தையையும் உன்னையுமே எண்ணி வாய்ப் பிதற்றுகிருள். அங்கு கொண்டுவிடு என்று கண்ணம்மாளைத் தொந்தரவு செய்கிருள். ஜுரம் 105 அடிப்பதால் அழைத்துவரவும் முடியாது தவிக்கிறேன். நீ தயவுசெய்து அடுத்த நிமிடமே குழந்தையை அழைத்துவந்து சேரு. கிருபாவதியைப் பார்க்கப் பயமாயிருக்கிறது. உடனே புறப்படு. **நாகராஜன்**"

இதைப் படித்தவுடனே முரளியின் ஏமாற்றமும், கோபமும் கரைபுரண்டது. தன்னிடம் இல்லாத பொல்லாத பொய்யைச் சொல்லித் தன் தாயார் ஏமாற்றிக் குழந்தையையும் நகைகளையும் கொண்டுவந்த ஆத்திரம் பெருந் தீபோல் மூண்டது. அந்தக் கடிதத்தைக் கொண்டுவந்து தகப்பனுரிடம் கொடுத்தான்.

விச்வநாதன் இதைப் படித்துப் பார்த்ததும் முரளியைவிட அதிகமான கோபத்தையடைந்து தத்திக்குதித்துத் தாண்டவமாடியவாறு, "நான் நினைத்தபடிதான் முடிந்துவிட்டது. கிருபாவதி தானுக ஒருபோதும் குழந்தையைக் கொடுத்தனுப்பியிருக்கமாட்டாள். இந்த மூதேவியே ஏதோ விஷமம் செய்திருக்கவேண்டுமென்று கண்டிப்பாய் நினைத்தேன். தாயையும் குழந்தையையும் பிரித்துக் கொலை செய்வதற்கு ஒப்பான காரியத்தைச்செய்யத்தான் அத்தனை அக்கரையாக ஒருவரிடமும் சொல்லாதுபோனுள்போலிருக்கிறது. என் மனத்தைப் பிளந்து மானத்தை வாங்குவதற்கே இந்த மகாபாவி பூமியில் பிறந்தாள்போலிருக்கிறது. முரளீ! இனி இவள் தாக்ஷிண்யத்தைப் பார்க்கவேண்டாம். காரை எடு. நாமிருவரும் குழந்தையுடன் இப்போதே போய்வருவோம். நகைகளையும் மரியாதையாகக் கொடுக்கச் சொல்லு." என்று கர்ஜனை செய்தபடியே உள்ளேபோனுர்.

உள்ளே பத்திரகாளியம்மாளையும் காணவில்லை; குழந்தையையும் காணவில்லை. முரளி நேரே ஷெட்டுக்குப்போய் பார்த்தான். காரையும் காணவில்லை. வேலையாளை விசாரித்ததில் பெரியம்மாள் குழந்தையுடன் வெளியே போனதாயும் ஐயாவுக்குக் கார் வேண்டுமானல் டாக்ஸி வைத்துக்கொள்ளச் சொல்லும்படி கூறிவிட்டுப் போனதாயும் தகவல் கிடைத்தது. என்ன செய்வான் பாவம். குழந்தையுடன் அந்த பிசாசு எங்கே போயிருக்கும் என்று யாரறிவது?

கூண்டிலடைபட்டுள்ள சிங்கம்போல் தந்தையும் மகனும் தவிக்கிறார்கள். வண்டியில் அவள் எங்கே போனாள் என்பதை யாரால் கண்டுபிடிக்க முடியும்? பல்லைக்கடித்தவாறு கண்கள் சிவக்கத் தவிக்கிறார்கள். மணி ஏறுகிறதேயன்றி மகராஜி வரும் வழியைக் காணவில்லை.

மாலை நாலுமணி சமயத்தில் முரளிக்குக் கீழ் உள்ள அதிகாரி ஆபீஸிலிருந்து அர்ஜெண்டு தந்தியொன்றை எடுத்துக்கொண்டு அவசரமாக வந்து தந்தியைக் கொடுத்தான். அதைப் பிரித்துப்பார்த்ததும் முரளிக்கு இடி இடித்ததுபோலாயிற்று.

அதாவது, இன்றிரவே வெகு முக்கியமான காரியமாய் நரஸிங்கப்புரத்திற்குப் போகும்படி ஆபீஸ் மேலதிகாரியிடமிருந்துவந்த தந்தி அது. தந்தியைத் தகப்பனாரிடம் காட்டினான். காலம் படுகிறபாட்டில் வேலையில் தகராறு இல்லாது பார்த்துக்கொள்ளவேண்டுமென்பதால் உடனே புறப்படுவதாய் தந்தி கொடுக்கச் செய்தான்.

'குழந்தையுடன் ஒருவேளை கிருபாவதியிடந்தான் அம்மா போயிருப்பாளோ!' என்கிற யோசனை கூட உண்டாகியது. எதற்கும் தகப்பனாரிடம் குழந்தையைக் கொண்டு விடும்படிக்குக் கூறிவிட்டு அன்றே புறப்பட்டுவிட்டான். அவன் தொழில் முறையில் தலைவிதியை எண்ணிக் கிளம்பினானேயன்றி மனது என்னவோ தத்தளிக்கின்றது. நிம்மதியில்லாத நெஞ்சுடன் போகிறான். மனம் குழந்தையிடமும் கிருபாவதியிடமும் ஊசலாடுகின்றது.

## 28

மாலை ஆறுமணிக்குமேல் பார்வதியம்மாள் குழந்தையுடன் ஒரு கூடை விளையாட்டு சாமான்களை வாங்கிக்கொண்டு தன் தம்பியின் மருமகளையும் கூட்டிக்கொண்டுவந்தாள். குழந்தையின் முகம் அழுது அழுது உப்பியும் சிவந்தும் போனதோடு ஒரே நெட்டாக இரண்டு நாட்கள் விடாது அழுததால் ஜுரமும் வந்துவிட்டது.

இந்த சேர்வையைக் கண்டதும் விச்வநாதன் பல்லைக் கடித்தபடியே... "எங்கே இத்தனை நேரம் தொலைந்துபோனாய்? உன் ஜென்மத்தைச் செருப்பாலடிக்க. கிருபாவதியே குழந்தையைக் கொடுத்ததாகப் புளுகு மூட்டையைக் கூசாது கொட்டியளந்து எங்களை எமாற்றியதோடு ஜெரித்துவிடும் என்றும் பார்த்தாயா! கிருபாவதியின் நகைகளைக் கூசாமல் கழுட்டியும் கொடுக்கச் செய்து வாங்கிவந்த ரகஸ்யம் தெரியாதென்று பார்த்தாயா! உன் வண்டவாளம் வெளியாகிவிட்டது. உனது கிராதகச் செய்கையினால் கிருபாவதிக்கு நினைவு தெரியாத ஜுரம் வந்துவிட்டதாம். முதலில் அந்த நகைகளை இப்படிக் கொடு. நான் இப்போதே குழந்தையைக் கொண்டுவிட்டு வரப்போகிறேன். உன்னையொருமனிதப் பிறவியாய் அதிலும்...இரக்கத்திற்குப் பெண்கள் இதயம் இருப்பிடமென்பார்கள் அத்தகைய—பெண் ஜென்மாவில் உன்னைப் பாழும் கடவுள் எப்படித்தான் பிறப்பித்தானோ! இத்தகைய அனுபவங்கள் உன்னை சும்மாவிடாது. பத்திரம். உம்...குழந்தையைக் கொடு...என்று குழந்தையை பலவந்தமாக வாங்கிக்கொண்டார்.

குழந்தையின் உடம்பு நெருப்பாய்க் கொதிப்பதைக் கண்டு துடி துடித்தவாறு "ஐயையோ! குழந்தைக்கு ஜுரம் காய்கிறதே... நீ நாசமாய்ப் போக. உன் வயது குட்டிச்சுவருக்குப் புகுந்தாலும் உபயோகமுண்டாகுமே...உன்னாலேயே இந்த அனர்கமான இரு ஆத்மாக்களையும் இழக்க நேர்ந்துவிடும்போலிருக்கிறதே...டாக்டரிடமாவது காட்டினாயா? இத்தனை நேரம் எங்கு துலைந்துபோயிருந்தாய்!" என்று சீறிவிழுந்தார்.

தனது செய்கை முற்றும் எப்படி இவருக்குத் தெரிந்திருக்கும். அந்தச் சித்ராங்கி கிருபாவதிதான் எழுதியிருக்கவேண்டுமென்று அவள்மீது ரௌத்திராகாரமான கோபம் பீறிக்கொண்டு வந்தது. குழந்தை அழுததால் சூடாயிருக்கிறதென்றே நினைத்திருந்தாள். அது கடுமையான ஜுரமாயிருப்பதைக் கண்டதும்

அசையாத கல்நெஞ்சத்தையுடைய பார்வதியம்மாள் மனதும் சிறிது கலங்கியது.

ஆனால் தான் பிடித்த முயலுக்கு மூணே கால் என்பதை சாதிக்கும் குணமுடையவளாதலால், சற்றும் சுணங்காமல், "ஆமாம். அந்தப் பிச்சைக்காரியின் மகளுக்கு இத்தனை கொழுப்புதான இருக்கும்? இதைவிட அதிகமாகக்கூட இருக்கும். நீங்கள் கொடுக்கும் இடம் இன்னமும் என்னைச் சந்தியில் இழுக்கலாம். தானே வலிய வலிய என் கையில் சகலத்தையும் கொடுத்துவிட்டு உங்களுக்குக் கடிதம் வேறு எழுதிவிட்டாளா சாகசக்கள்ளி!

என்னமோ பாவம். அம்மா செத்துச் சங்கடப்படுகிறளே. இந்த சமயம் அவள் சொல்வதைக் கேட்கலாம் என்று எண்ணி நான் செய்ததற்கு பலனகிறது. இருக்கட்டும். என் முரளியைவிட இதென்ன உசத்தி இதை வளர்க்க என்னலாகாதுபோய்விட்டது? தாயில்லாத குழந்தைகளெல்லாம் வளரவில்லையா! இதோ இந்திராணியைப் பார்த்ததும் அழுகை சற்று ஓய்ந்திருக்கிறது. அதற்காகத்தான் நான் காலையிலே என் தம்பி வீட்டிற்குப் போய் இவளை அழைத்துவந்தேன். இவள் குழந்தைக்கு ஒரு வயதாகிறது. அந்தக் குழந்தையைத் தங்கம்போல் அவ தாயாரிடமே விட்டிருக்கிருள். என்ன குறைந்துவிட்டது. நான் கொடுக்கவும் மாட்டேன். நீங்கள் போகவும் வேண்டாம். வீணை மிறட்டலுக்கு நான் பயப்படமாட்டேன்." என்று மிகவும் மூர்க்கத்தனமாயும் லக்ஷ்யமில்லாமலும் பேசியதோடு உள்ளே போய்விட்டாள்.

விச்வநாதனுக்கு ஆத்திரம் முக்கண்ணமூர்த்திக்குமேல் பொங்கிவிட்டதால் அவரையும் மீறிய ஆவேசத்துடன் உள்ளே போனர். பார்வதியம்மாளை தடார்புடார் என்று கண்ணு மண்ணு தெரியாது அடித்துவிட்டு அவள் இடுப்பிலிருக்கும் இரும்பு பெட்டி சாவியை எடுத்துப் பெட்டியைத் திறந்து க்ருபாவதியின் அநேகப்படியான நகைகளையும் சேர்த்து எடுத்து ஒரு சிறு பெட்டியில் வைத்துக்கொண்டார்.

அழும் குழந்தையை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு பெட்டி, குழந்தை சகிதம் காரில் ஏறி உட்கார்ந்து, அதிகார தோரணையில் "உம்! கிருபாவதி வீட்டிற்குக் காரை ஓட்டு" என்றார். ட்ரைவருக்கு எப்போதும் எஜமானரிடம் பயம். அவர் சொல்லியதற்கு எதிர்பேச்சு சொல்லவேமாட்டான். ஆதலால் உடனே காரில் ஏறி உட்கார்ந்தான்.

தன்னை அடித்துவிட்டு நகைகளையும் குழந்தையையும் தன் கணவன் எடுத்துப் போவதைச் சகியாத பார்வதியம்மாள் வெட்கம் மானம் எல்லாவற்றையும் விட்டு வீதியில் ஓடிவந்து "நீங்கள் இப்போது போகக்கூடாது. ட்ரைவர்! காரை ஓட்டாதே.. நிறுத்து...நிறுத்து..." என்று பெரிதாகக் கத்தினள். இவள் கத்துவதற்குள் கார் மான் வேக மனோவேகமாகச் சென்று மறைந்தது.

இந்த அதியத்புதமான தாம்பத்ய அழகையும் நாடகத்தையும் கண்டு கூட வந்த பெண்ணுக்குக் கூறத்திறமற்ற பயமும் நடுக்கலும் உண்டாகிவிட்டது. கணவனிடம் இப்படிகூட ஒரு மனுஷி நடந்துகொள்வாளா என்று நினைக்கும்போது அந்தப் பெண்ணின் ஆச்சரியம் கரைபுரண்டது. கட்டிய கணவனுக்கே இத்தகைய மதிப்பும் மரியாதையும் நடக்கும்போது கிருபாவதிக்கு எத்தகைய சிறப்பும் சிங்காரமும் நடக்கிறதோ! அடேயப்பா! இந்த புண்யவதியின் மகனுக்கு முதலில் என்னைப் பார்த்தார்களே நல்லவேளையாக பகவான் என்னை இந்த ராக்ஷஸியிடம் கொடுக்காது ரக்ஷித்தார். இந்த வீட்டில் ஒரு நிமிஷங்கூட இருக்கமுடியாது. நான் இப்போதே போய்விடவேண்டும்" என்று எண்ணி அவ்வூரிலுள்ள தனது ஒன்றுவிட்ட தமயனுக்குச் சொல்லியனுப்பி அவனை வரவழைத்தாள்.

"அத்தை! நான் ஊருக்குப் போகிறேன். எங்க அண்ணு வந்திருக்கிறன். என்று கூறியவாறே நடையைக் கட்டினள். பார்வதியம்மாளுக்கு எப்படித்தான் இருக்கும் என்பதைக் கூறமுடியுமா! அம்மாளின் தத்ரூபம் காளிஸ்வரூபமாகவே தோன்றியது.



# திருக்குறள் ஸாரம்

வரகவி
திரு. அ. சுப்ரமண்ய பாரதி

1. தள்ளா விளையுந் தக்காருந் தாழ்விலாச் செல்வருஞ் சேர்வதுநாடு
2. கேடறியாக் கெட்டவிடத்தும் வளங்குன்றா நாடென்ப நாட்டின்றலை
3. நாடென்ப நாடாவளத்தன நாடல்ல நாட வளந்தருநாடு

என்பன போன்ற சிறப்புக்களில் விளக்கியது.

இதன்பின் அரணையும் பொருளையும் விளக்கியது.

பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு மெண்ணிய தேயத்துச்சென்று எனச் சிறப்பித்து—

அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்.

என்னும் போதனையில் பொருளீட்டு முறையை விளக்கியது.

இது "தீ"வினை விட்டீட்டல் பொருள்" என்ற ஔவையின் உபதேசத்திற் கிசைந்ததாயிருப்பதைக் காண்க.

இதன்பின் படைமாட்சியை விளக்கி அதன்பின் நட்பை விளக்கியது நட்பு.

அன்பீனு மார்வமுடைமையது வீனுநண்பென்னு நாடாச்சிறப்பு.

என்றபடி அமையும் நாடாச்சிறப்பு. இல்வாழ்வானுக்கு அன்பும் துறந்தார்க்கு அருளும்போல் அரசனுக்கு நட்பு சிறந்தது. ஆதலால் விதி முகத்தால் ஐந்ததிகாரத்திலும் எதிர் முகத்தால் பன்னிரண்டதிகாரத்திலும் மிக விரிவாக போற்றத் தக்க பல சிறந்த போதனைகளை யமைத்து இதனை விளக்கியுள்ளது. எதிர் முகத்தில் வெகுளியால் விளைவன காமத்தால் விளைவன என நட்பினை இரு பிரிவில் விளக்கியிருப்பது வியக்கத்தக்கதேயாம். நட்பைப்பற்றி விளக்கும் ஒவ்வொரு போதனையும் அரிதினும் அரிதெனப் பாராட்டற்பாலதேயாம்.

அங்க வியலின்பின் மருந்து என்னும் தலைப்பில் ஓர் அதிகாரம் தனியே விளங்குகிறது. இது மக்கட்கு உணவு செயல்கள தொவ்வாமையின் காரணமாய் உண்டாகும் நோயினைத் தீர்க்கும் மருந்தின் திறம் விளக்குகிறது. அற முதலிய வைகளைச் செய்ய உடம்பு ஆதாரமாதலின் அதனை மறவாமல் காத்துக்கொள்ள வேண்டிய தவசியமாகுமன்றோ? இது பொதுப்பட எல்லோருக்கு மமைந்த செயலேயாயினும் - மக்களை ஓம்புமுறையை மேற்கொண்ட அரசனும் இது கருதிச் செய்யவேண்டுவன செய்தலே முறையென்பதை விளக்கவே இவ்வதிகாரம் - அரச நீதியின் அங்கவியலின் பின் ஒழிபியலின் முன் விளங்குகிற தென்பர் அறிஞர்.


மருந்தில் அமைந்துள்ள பத்துக் குறளும் உடம்பில் நோயணுகாத வழி அதனைக் காத்துக்கொள்ள மக்கள் தங்களுக்குத் தாங்களே செய்துகொள்ளத் தக்க சிகித்ஸையே யாகும் - ஆதலால் மக்கள் மறவாமல் மனப்பாடம் செய்து கொண்டு அவ்வப் போது நினைந்து பயனை யடையத்தக்க சிறந்த போதனையாமிது.

(அடுத்த இதழில் முடிவு.)



'நந்தனார்,' 'ரிஷ்ய சிருங்கர்' படங்களில் நடித்து, தனது இனிய பாடல், சிறந்த நடனம், உயரிய நடிப்பு முதலியவைகளால் ஜனங்களின் மனதைக் கவர்ந்த பிரபல தென்னிந்திய சினிமா நக்ஷத்திரம் ரஞ்சன் சொல்லுகிறார்:

"நான் எப்பொழுதும் நரஸூஸ் காபி, டீயையே உபயோகிக்கிறேன். ஏனெனில் அவைகள் மிகச் சிறந்தவை என்பது எனக்குத் தெரியும்."



புகழ்பெற்ற சினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது

# நரஸூஸ் டீ

M. N. K.—13 TM.


PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, STATION ROAD, SINGAPERUMALKOIL, B. O.